ISSN 1391-9504

Vijey විජය

# விஜய்

07.11.2012 - மலர் 09, இதழ் 36

# சுற்றுலாத்துறையில் எரிசக்தியின் பங்களிப்பு





வாசகர் முகம்

விலை
ரூபா 15/-

சைக்கிள்களை வெல்லுங்கள்...



தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாருதப்புரவீகவல்லி' 06

## விஜயன் – குவேனி சந்திப்பு

**ஆக்கம்: அரியாலையூர் சி.சிவதாசன்**

சிங்கள விஜயன் ஆழ்ந்த சிந்தனைவசப்பட்டவனாகக் காணப்பட்டான். ஆரிய வம்சத்தின் வாரிசான அவன் இயக்கர்கள் வாழும் இந்த அசுர பூமியில் தன்னோடு வந்தவர்களைக் காணாது தன்னந்தனியனாகத் திகைத்து நின்றான். எனினும், அவன் எதைக் கண்டும் அஞ்சவில்லை. எப்படியாவது தன்னோடு வந்தவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் எனத் திடம் கொண்டான். அவர்கள் தன்னுடன் இருந்தால்தான் அவன் நினைத்ததைச் சாதிக்க முடியும் என்பதை உணர்ந்து, வருவது வரட்டும் என்ற சிந்தனையோடு அஞ்சாநெஞ்சம் கொண்ட விஜயன் தன் கூட்டாளிகளைத் தேடி அந்த அடர்ந்த காட்டுக்குள் புகுந்தான். அந்த அடர்ந்த காட்டில் பெண்ணொருத்தியின் கட்டளைக்கு அஞ்சிக் காரியம் ஆற்றும் ஆண்கள் சிலரைக் கண்டான். அங்கு காணப்பட்ட உயர்ந்த மரங்களில் கறுப்பான தடித்த மனிதர்கள் பதுங்கி இருந்தனர். அவர்கள் கைகளில் அம்புகளும் வில்லும் காணப்பட்டன. விஜயன் எதிர்பார்த்ததைவிட, அவர்கள் அவனை மிக விரைவாகவே சுற்றி வளைத்தனர். ஆபத்தான இடத்தில்தான் அகப்பட்டுக் கொண்டதை உணர்ந்த விஜயன் இந்த நேரத்தில் விவேகமாக நடப்பதே சரியானதாகப்படும் எனக் கருதினான். அந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் பெண்ணாகிய குவேனி தனது குழுவினரால் கைது செய்யப்பட்ட விஜயனின் சிவந்த நிறத்தையும், நீலம் கலந்த கண்களையும் பார்த்துப் பிரமித்துப்போனாள்.

தன் கூட்டத்தில் இருப்பவர்கள் எல்லாம் கறுப்பு நிறத்தவர்கள் என்பதையும் இதற்கு முன் தன்னால் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் சிவந்த நிறமேனியராய் இருந்த போதும் அவர்களை விரும்பாத அவள் விஜயனின் தோற்றத்தைக் கண்டு அவன்மேல் தீராத ஆசை கொண்டு சிந்தனை வசப்பட்டாள். அப்போது விஜயன் அவளிடம் ''பெண்ணே! இதற்கு முன்னர் இங்கு வந்த என் நண்பர்கள் எங்கே?'' எனக் கேட்டான். அவள் அட்டகாசமாகச் சிரித்தபடியே, அவர்கள் உன் நண்பர்களா? அப்படியானால், கடலோரம் நிற்கும் பெரும் மரக்கலத்தில் வந்தவர்களா நீங்கள்?'' என்று மிக மிடுக்குடன் கேட்டாள்.


''ஆம் பெண்ணே! என் தந்தை லாலா நாட்டின் மன்னன். அங்கிருந்து நாடு கடத்தும் நோக்கோடு நாம் மரக்கலத்தில் ஏற்றிக் கடலில் விடப்பட்டோம். மூன்று இரவுகளாகக் கடற்காற்றினால் எமது மரக்கலம் தத்தளிப்புக்கு உள்ளாகி இவ்விடம் வந்து சேர்ந்தது. எங்களை நாடு கடத்திய மன்னன் வேறு யாருமல்ல என் தந்தை சிங்கபாகு. அதனால் என்னை என் நண்பர்கள் சிங்கள விஜயன் என்றே அழைப்பார்கள்'' என்றான் விஜயன்.

சிங்கள விஜயனின் விபரங்களை மிக உன்னிப்பாக அவதானித்த குவேனி அவனை மணம் முடிக்க எண்ணினாள். தனது உரையாடலைத் தொடர விரும்பிய அவள், ''சிங்கள விஜயனே! உனக்கு உன் நண்பர்கள் தேவை. தங்குவதற்கும் வாழ்வைத் தொடர்வதற்கும் இங்கு இடம் தேவை. உன் நண்பர்களை நான் சிறைப்பிடித்துள்ளேன். அவர்களை விட்டுவிட வேண்டும் என்றால் நான் உன்னிடம் கேட்பதை உன்னால் எனக்குத் தர முடியுமா?'' எனக் கேட்டாள். விஜயனால் எதுவும் பேச முடியவில்லை. அவளிடம் ''நான் சர்வ வல்லமை படைத்த இராஜகுமாரன். நீ என்ன கேட்டாலும் தருகிறேன். உன் விருப்பம் என்ன? கூறு'' என்றான். மகிழ்வடைந்த குவேனி ''சிங்கள விஜயா நீ என்னை மணம் செய்துகொள்ள வேண்டும்.

அவ்வாறு செய்வாயானால், உன் நண்பர்களை விடுதலை செய்கிறேன்'' என்று கூறினாள். விஜயனும் அவளை மணம் செய்து கொள்ளச் சம்மதித்தான். அன்றிரவு தாமரபரணி (தம்பண்ண) கடலோரத்தில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. தேனுடன் கலந்த மாமிசங்கள் தேவையான அளவு பரிமாறப்பட்டன. 'லாலா' நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட விஜயனின் கூட்டத்தவர்கள் தம்மை மறந்து, தம் துயரங்களை மறந்து இன்பத்துடன் ஆடல், பாடல்களில் திளைத்தனர். நாளடைவில் இயக்கர்களுடன் கூடிய அவர்கள் வாழ்க்கை அவர்களைத் திருப்தி கொள்ள வைக்கவில்லை. புதுமை விரும்பியாகிய விஜயன் தாமரபரணியில் சிறந்த நகரொன்றினை உருவாக்க விரும்பினான். இடத்துக்கிடம் சென்று வாழும் இயக்கர்களின் வாழ்க்கை முறை அவனுக்குப் பிடிக்கவில்லை. அவ்வாறே, இயக்கர்கள் சிலருக்கும் ஓரிடத்தில் தங்கி வாழும் வாழ்க்கை முறை பிடிக்கவில்லை. அதனால், அந்த இயக்கர்களில் சிலர் அவ்விடத்தை விட்டு இரவோடு இரவாக இலங்கைத் தீவின் மத்திய பகுதிகளுக்கும் மலைநாடுகளுக்கும் சென்று தமது வாழ்க்கை முறையினைப் பின்பற்றினர். சில ஆண்டுகளில் விஜயன் அக்கூட்டத்தின் தலைவனாகத் திகழ்ந்தான். குவேனி, விஜயனின் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் விரும்பவில்லை. அவள் விஜயன் மூலம் மகனையும், மகளையும் பெற்றெடுத்தாள். இதேவேளை, குவேனியோடு வாழ்ந்த வாழ்க்கையை விட்டு விஜயன் வேறு வாழ்வினை மேற்கொள்ளத் திட்டமிட்டான்.

(தொடரும்)





விஜய் Bookvin

### இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். வாராவாரம் இரண்டு சிறந்த கேள்விகளுக்கு தலா ருபா 500 பெறுமதியான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.**

**✱ மெழுகுவர்த்திச் சுவாலையை எத்திசையில் பிடித்தாலும், அதன் சுவாலை மேல் நோக்கி எரிகின்றது அது ஏன்?**



'மெழுகுவர்த்தி' என்றில்லை, பொதுவாக, எத்தகைய சுவாலையும் மேல் நோக்கியே எரியும். மெழுகுவர்த்தி எரியும்போது, அதனைச் சுற்றியுள்ள வளி (காற்று) வெப்பமடைகின்றது. இந்த வெப்பம் காரணமாக, வாயுக்கள் விரிவடைகின்றன. இவ்வாறு விரிவடைந்து, கனவளவு அதிகரிப்பதனால் அடர்த்தி குறைகின்றது.

$$\left\{ \text{அடர்த்தி} = \frac{\text{திணிவு}}{\text{கனவளவு}} \right\}$$

அடர்த்தி குறைந்த வளி, மேல் நோக்கி எழும். அவ்வாறு எழும்போது, சுவாலையை மேல்நோக்கித் தள்ளுகின்றது. இதனைத் தொடர்ந்து சுற்றியுள்ள (சற்றுக் குளிரான) வளி அதன் இடத்தை நிரப்புகின்றது. இது தொடர்ந்து நிகழும்போது, சுவாலை அவ்வடிவத்தைப் பெறுகின்றது. மெழுகுவர்த்தியை எத்திசையில் பிடித்தாலும், இச்செயற்பாடு மாறமாட்டாது.

*எம்.எஸ்.எம்.மனாஸ், கெலிஓயா.*

✱ ✱ ✱ ✱

**✱ பெற்றோலில் இயங்கும் இயந்திரங்களை டீசலில் ஏன் இயக்க முடியாது?**



பெற்றோல், டீசல் இயந்திரங்கள் தொழிற்படும் முறைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பெற்றோல் இயந்திரத்தில், திரவ பெற்றோலானது, சிறு துகள்களாக விசிறப்பட்டு, காற்றுடன் (வளி) கலக்கப்படுகிறது. பின்னர் ஒரு தீப்பொறி உருவாக்கப்பட்டு, பற்ற (Spark) அதன் விளைவாக தகனம் (எரிதல்) நிகழ்கிறது. இந்த சக்தியில் இயந்திரம் (engine) இயங்குகின்றது.

டீசல் இயந்திரத்தில், முதலில் வளி (காற்று) மிக வலுவாக அமுக்கப்படும். (ஆரம்ப அமுக்கத்தின் 21 மடங்கு) இவ்வாறு அமுக்கப்படுவதனால், அதன் வெப்பநிலை அதிகளவில் (550°C) உயரும். இந்த வளியினுள் டீசல் விசிறப்படும்போது, தகனம் நிகழும்.

அதிகூடிய அமுக்கம், வெப்பநிலையை தாங்கக்கூடியவையாக டீசல் இயந்திரங்கள் இருக்க வேண்டும். டீசலை தகனமடையச் செய்ய சாதாரண வெப்பநிலையோ, பொறியோ போதாது.

*எம்.டி.எஃப்.ஸுல்ஃபா, பள்ளிவாசல் வீதி, உடுகொட.*

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# விஞ்ஞானத் துறையில் சாதனைப் பெண்

# மேரி கியூரி

*1867 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் திகதி போலந்தின் வோர்சோ நகரில் பிறந்த மேரி லொடொவ்ஸ்கா கியூரி, விஞ்ஞான உலகில் அளப்பரிய சாதனைகளை நிகழ்த்திய பௌதிக மற்றும் ரசாயனவியல் விஞ்ஞானியாவார். கதிர்வீச்சினைக் கண்டுபிடிப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்த இவர், உலகளவில் பிரபல்யம் பெற்றிருந்தார். அத்துடன், இரண்டு தடவைகள் நொபெல் விருதினைப் பெற்ற விஞ்ஞானியாகவும் இவர் திகழ்கின்றார். ரசாயனவியலுக்கும் பௌதிகவியலுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவைக்காகவே இந்த நொபெல் விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டன. பெரிஸ் பல்கலைக்கழகத்தின் முதலாவது பேராசிரியை என்ற கௌரவமும் இவருக்குண்டு.*



மேரி கியூரியும் பியரே கியூரியும்



தனது இரு புதல்விகளுடன் மேரி கியூரி



வோர்சோவில் அமைக்கப்பட்டுள்ள மேரி கியூரியின் சிலை



மேரி கியூரி



1911 இல் மேரி கியூரிக்கு வழங்கப்பட்ட நொபெல் விருது

## குடும்பப் பின்னணி

மேரி கியூரியின் பெற்றோர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களாவர். மேரி கியூரிக்கு நான்கு சகோதர, சகோதரிகள் இருந்தனர். மேரி கியூரியின் இளவயதிலேயே அவரது தாயார் காசநோய் காரணமாக, காலமானார். மூத்த சகோதரி தைபொயிட் காய்ச்சலினால் மரணமடைந்தார். இந்த இழப்புகளையும் வேதனைகளையும் பொருட்படுத்தாமல் மனதைத் திடப்படுத்திக்கொண்டு மேரியும் அவரது சகோதரியுமான புரொனிஸ்லாவாவும் மருத்துவ விஞ்ஞானத்தினைக் கற்றுக்கொள்ளவும் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவும் திடசங்கற்பம் பூண்டனர்.

அந்தவகையில், விஞ்ஞானத்திற்காக தனது வாழ்க்கையை மேரி கியூரி இளம் வயதிலேயே அர்ப்பணிக்கத் தொடங்கினார். 1891 இல் அதாவது, அவரது 24 ஆவது வயதில் அவர் புரொனிஸ்லாவாவைப் பின்பற்றி மேலதிக உயர் கல்விக்காக பெரிஸ் நகருக்குச் சென்றார். அங்கு உயர் கல்வியை முடித்த அவர், விஞ்ஞான ஆய்வுகளில் தொடர்ந்து ஈடுபட்டார். 1894 இல் மேரி கியூரி சோபோன் பல்கலைக்கழகத்தில் கணிதப் பட்டதாரியானார். 1895 இல் அவர் பியரே கியூரியை மணமுடித்தார். பௌதிக விஞ்ஞானம் மற்றும் ரசாயன விஞ்ஞானம் தொடர்பான பாடசாலையின் ஆலோசகரான பியரே கியூரி, தனது துணைவியான மேரி கியூரியின் ஆய்வுகளுக்குப் பேருதவி புரிந்தார். இவர்களுக்கு ஐரின், ஈவ் என்ற பெயர்களில் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன. 1934 ஜூலை 4 ஆம் திகதி மேரி கியூரி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

## நொபெல் விருது

1903 இல் பௌதிகவியலுக்காக, மேரி கியூரிக்கும் அவரது கணவரான பியரே கியூரிக்கும் மற்றுமொரு பௌதிகவியலாளரான ஹென்றி பெக்கரலுக்கும் நொபெல் விருது கிடைத்தது. குறித்த நொபெல் விருது இந்த மூவருக்கும் பகிர்ந்தளிக்கப் பட்டாலும், 1911 இல் ரசாயன விஞ்ஞானத்திற்கான நொபெல் விருது மேரி கியூரிக்கு கிடைத்தது. அதனை அடுத்து நொபெல் விருதினை வென்றெடுத்த முதலாவது பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றார். மேரி கியூரி, 1911 இல் ரசாயனவியலுக்கு ஆற்றிய பங்களிப்புக்காக விருது பெற்ற ஒரு மாதத்தின் பின்னர் சிறுநீரகக் கோளாறினால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டார்.

கதிர்வீச்சு என்ற கோட்பாட்டினையும் ரேடியம் மற்றும் பொலோனியம் என்ற மூலப்பதார்த்தங்களையும் மேரி கியூரி கண்டுபிடித்தார். கதிர்வீச்சினைப் பயன்படுத்தி நியோப்பிளஸ் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதலினை உலகுக்கு வழங்கியவரும் இவரே ஆவார். விஞ்ஞான மற்றும் மருத்துவ ஆய்வுகளுக்கான கேந்திர நிலையமாகத் திகழும் பெரிசிலுள்ள கியூரி கல்வி நிறுவனமும் (Institut Curie) மேரி கியூரியின் வழிகாட்டுதலினாலேயே உருவானது. (இ)

வாசகர் முகம்



'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
ஜே.உஸ்மான்,
நாங்குருகம, மாவனல்லை.


## 'விஜய்' தரும் சைக்கிள் பரிசு!

வாரம்தோறும் சைக்கிள்களை வெல்வதற்கான வாய்ப்பு.....

விஜய் பத்திரிகையில் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு சரியான விடைகளை எழுதி சைக்கிள்களை பரிசாக வெல்லுங்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியது:**

இங்கு கேட்கப்படுகின்ற கேள்விக்கான விடை இந்த வாரம் 'விஜய்' பத்திரிகையில் இடம்பெற்றுள்ள ஏதோ ஓர் ஆக்கத்தினுள் பொதிந்துள்ளது. அந்த விடையைக் கண்டுபிடித்து உடனடியாக எமக்கு தபாலிடுங்கள் (நேரடியாக ஒப்படைப்பதைத் தவிர்க்கவும்).

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படுபவருக்கு சைக்கிளொன்று பரிசாக வழங்கப்படும்.

இந்த வாரக் கேள்வி 01

மண்ணரிப்புக்கு ஏதுவான காரணங்கள் 2 தருக.



கீழ்க்காணப்படும் கூப்பனில் சரியான விடையை எழுதி 16.11.2012 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த முகவரிக்கு தபாலிடுங்கள்.

கேள்வி இல : 1
விடை : ................
பெயர் : ................
வயது : ................
முகவரி : ................
மாவட்டம் : ................
தொ.பே.இல : ................

அனுப்ப வேண்டிய முகவரி;
சைக்கிள் பரிசு (1)
'விஜய்'
த.பெ.எண்: 2037 கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் - 06

# விசித்திரக் குகைக்குள் தங்கச்சுவடி

குகை வாயிலிலிருந்த அந்த மர்மமான சிறிய கதவைப் பார்த்து மனோகர் செய்வதறியாது திகைத்தான். அக்கதவைச் சூழவுள்ள இடங்கள் நள்ளிரவு போன்று இருள் மண்டி மிகப் பயங்கரமாக இருந்தன. அவ்விடங்களைப் பார்க்கும்போது, ஏதோ இனம்புரியாத அச்சம் மனோகருக்கு ஏற்பட்டது. எனினும், மனதைத் திடப்படுத்திக்கொண்டு மெதுவாக



அந்த மர்மமான கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். உள்ளே செல்லச் செல்ல இதயம் வேகமாக அடித்தது. இவ்வாறான சந்தர்ப்பங்களில், காட்டுவாசிகளிடம் சிறைப்பட்டுள்ள அமரனை நினைத்தபோது மனம் சற்றுத் திடமாகியது.

மேலும், அந்த மர்மமான குகையின் உள்ளே செல்கையில் திடீரென ஓரிடத்தில், சிலந்தி வலையொன்றில் மனோகர் சிக்கிக்கொண்டான். அச்சமுற்ற மனோகர் சிலந்தி வலை என்று உணர்ந்ததும் தைரியத்துடன் அதனை அகற்ற முயன்றான். ஆனால், முடியவில்லை. மனோகருக்கு ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு முயன்றும் அந்தச் சிலந்தி வலையை விலக்க முடியவில்லை. என்ன செய்வது என்று சிந்தித்தபடியே, வேகமாகப் பின்நோக்கி நகர்ந்தான். அப்போது அவ்வலை அவனை விட்டு நீங்கியது. ஆனால், அதற்கு ஒரு சேதமும் ஏற்பட்டிருக்கவில்லை. ''என்ன இது கயிற்றால் பின்னப்பட்ட வலைபோல் இவ்வளவு கனமாக உள்ளதே! அப்படியென்றால் இதில் வாழும் சிலந்தி எவ்வளவு பெரியதாக இருக்கும்'' என்று சிந்தித்தவாறே அவ்வலையின் அருகில் காணப்பட்ட ஒரு துளையினுள் மெதுவாக உள்ளே நுழைய முற்பட்டான்.

மிகுந்த சிரமத்துடன் உள்ளே நுழையும்போது, அத்துளை இறுகுவது போல் இருந்தது. இதனால், வேகமாக பின்நோக்கிவர முனைந்தான் மனோகர். ஆனால், அந்த வலை அவனின் வயிற்றை இறுகிக்கொண்டது. தட்டுத் தடுமாறிய மனோகர் அந்த மர்மமான துளையில் இருந்து வெளியேற முயற்சித்தான். அப்போது தவறுதலாக அவன்

## விசித்திரக் குகைக் காவல்காரன்



கையிலிருந்த சாவி கீழே விழுந்து பயங்கரமான ஓர் ஒலியை எழுப்பியது. அந்த ஒலி குகை முழுவதும் எதிரொலித்தது. அந்தச் சத்தம் நின்றதும் மனோகருக்கு முன்னால் காலடிச் சத்தம் கேட்டது. சாவியின் ஒலியைக் கேட்டுத்தான் யாரோ வருகிறார் என்பது அவனுக்குப் புரிந்தது. அப்போது அவன் உடல் வெடவெட என நடுங்கியது.

முன்னால் பயங்கரமான இரு சிவப்புக் கண்கள் வந்துகொண்டிருந்தன. அதைக் கண்டதும் மனோகருக்கு ஆச்சரியமும் பயமும் அதிகரித்தது. சிறிது நேரத்தின்பின் முன்னால் வந்தது ஒரு பெரிய சிலந்தி என்பதை மனோகர் உணர்ந்தான். ''இந்தச் சிலந்திதான் இந்தக் குகையைக் காவல் காக்கிறது போல் தெரிகிறது. அதனிடமிருந்து தப்பிவிட வேண்டும்'' என்று நினைக்கும்போதே, அந்தச் சிலந்தி அவனருகில் வந்து கையில் அதன் கொம்புகளை வைத்தது. அப்போது அவனது குருதி உறிஞ்சப்படுவது போன்ற வேதனையான ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது.

(தொடரும்)

# பொருத்தமான தீர்ப்பு

குட்டி யானை ராமு, குறும்பு மிக்கது. எப்போதும் சேட்டைகள் செய்துகொண்டே இருக்கும். சிறிய சிறிய மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்து விளையாடும், வேண்டுமென்றே கிளைகளை ஒடித்துப் போட்டுக்கொண்டே செல்லும். மான், ஆடு, முயல் என்று சிறிய மிருங்களைக் கண்டால் விரட்டி விரட்டிப் பயமுறுத்தும். இப்படி ராமுவின் சேட்டைகள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே சென்றன. அதன் அட்டகாசம் காட்டையே கதிகலங்க வைத்தது. அனைத்து விலங்குகளும் குட்டியானையின் அமர்க்களத்தால் மிரண்டு போயின.

'மதம் பிடித்த யானையைவிட, மோசமாக நடந்து கொள்கிறது. அது செய்யும் அட்டூழியங்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்' என்று எல்லா விலங்குகளும் முடிவு செய்தன.



குட்டி யானையின் நடவடிக்கைகள் உடனே சிங்கராஜாவுக்கு தெரிவிக்கப்பட்டது. அனைத்து விலங்குகளின் கூட்டம் அவசர அவசரமாகக் கூட்டப்பட்டது. சிங்கராஜா தலைமைபீடத்தில் வீற்றிருக்க மொத்த விலங்குகளும் அங்கே குழுமியிருந்தன. தாய் யானை குற்றவாளியாக கூனிக் குறுகியபடி நின்றிருந்தது.

''உன் பிள்ளை செய்யும் அட்டகாசங்களை நீ ஏன் அடக்கவில்லை?'' என்று கோபமாகக் கேட்டது சிங்கராஜா.

''நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன், கேட்கவில்லை. அடித்துப் பார்த்துவிட்டேன். அடங்குதே இல்லை'' என்று வேதனைப்பட்டது தாய் யானை. அதன் கண்களில் கண்ணீர் வந்தது. சிங்கராஜா யோசித்தபடி, மற்ற விலங்குகளைப் பார்த்தது. '' என்ன செய்யலாம் நீங்களே சொல்லுங்கள்?'' என்று கூறியது.

''தக்க தண்டனை கொடுக்க வேண்டும். இதற்குக் கொடுக்கும் தண்டனை ஏனைய விலங்குகளுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும்'' என்றன சில விலங்குகள்.

''ஆயிரம் கசையடி கொடுக்கலாம்'' என்றது கரடி.

''இந்த வனத்தை விட்டே விரட்டிவிடுங்கள்'' என்றது நரி.

''இவனுக்கு மரண தண்டனை கொடுத்தால்தான் தொல்லை ஒழியும்'' என்றன சில விலங்குகள். விலங்குகள் பேசுவதைக் கேட்ட தாய் யானையின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. குட்டி யானையை அழைத்துவர உத்தரவிட்டது சிங்கம். சேவகர்களாகிய இரண்டு புலிகள் சென்று யானைக்குட்டியை அழைத்து வந்தன. தும்பிக்கையை உயர்த்தியபடி கம்பீரமாக வந்து நின்றது குட்டி யானை. அதற்கு குற்ற உணர்வு சிறிதும் இல்லை. ''எதற்காக என்னை வரச் சொன்னீர்கள்'' என்று ராமு, சிங்கராஜாவைப் பார்த்துக் கேட்டது''.

''எனக்கு வயதாகிவிட்டது. என்னால், முன்னர்போல் ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை. என் பணிகளைக் கூட இருந்து கவனிக்க சுறுசுறுப்பான, துடிப்பான, இளமையான ஆள் தேவை. அதற்கு நீதான் பொருத்தமாக இருப்பாய். ஏனைய விலங்குகளின் முடிவும் அதுவே. அதன் பொருட்டுத்தான் உன்னை அழைத்து வரச் சொன்னேன்'' என்றது சிங்கராஜா. ராஜாவின் பேச்சைக் கேட்டு கூடியிருந்த விலங்குகள் அதிர்ந்தன. குட்டியானைக்கு ஆச்சரியமாக இருந்தது. பெருமையிலும் அது பூரித்தது. சிங்கராஜா தொடர்ந்து பேசியது, ''அடுத்த காட்டிலுள்ள விலங்குகள் இரவு நேரத்தில் இங்கு வந்து அட்டகாசம் செய்கிறன. மரங்களை எல்லாம் சாய்க்கின்றன. அவற்றிடம் இருந்து வனத்தைக் காப்பது உன் பொறுப்பு. இன்று முதல் வனக்காப்பாளர் பொறுப்பை உனக்குக் கொடுக்கிறேன். நீ அதனை திறம்படச் செய்வாய் என்று நம்புகிறேன்'' என்றது.

''உத்தரவு மகாராஜா, எனக்கு பெரிய பொறுப்பை வழங்கியிருக்கிறீர்கள். இந்தப் பதவிக்குத் தகுந்தவனாக என்னை மாற்றிக் கொள்வேன்'' என்றது ராமு. தாய் யானை நன்றிப்பெருக்குடன் சிங்கராஜாவைப் பார்த்தது. குட்டி யானைக்குத் தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்த்த மற்ற விலங்குகள் ஏமாற்றத்துடன் கலைந்து சென்றன. பொறுப்பை ஏற்றுக்கொண்ட குட்டி யானை, குறும்புகளை விட்டுவிட்டு காட்டினைப் பாதுகாக்கும் வேலையில் இறங்கியது. இதனால் காடு அமைதியிலும், பசுமையிலும் செழித்தது.

சிங்கராஜாவின் தீர்ப்புச் சரியானது என்று காலதாமதமாகப் புரிந்துகொண்டன ஏனைய விலங்குகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி முகாமைத்துவம் - கல்வி முகாமைத்துவம்

# ஒழுக்கத்தோடு இணைந்த கல்வி மாணவருக்கு உயர்வைத் தரும்

அறிவும் ஒழுக்கமும் இணைந்த கல்வியே மாணவரொருவர் பெற்றுக்கொள்ள வேண்டிய முழுமையான கல்வியாகும்.



இன்றைய காலகட்டத்தைப் பொறுத்த வரையில், தவறான பழக்கவழக்கங்களில் தம்மை ஈடுபடுத்தக்கூடிய சமுதாயமாக மாணவ சமுதாயம் காணப்படுகின்றது. இதற்கு காரணம், அவர்களது அறியாமையும் பொழுதுபோக்கு அம்சங்களுமே ஆகும்.




நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியினால், இன்றைய மாணவர்கள் ஒழுக்க ரீதியில் பல பாதிப்புக்களை ஏற்படுத்திக்கொள்கின்றனர். உதாரணமாக: இணையம், தொலைக்காட்சி,Facebook போன்றவற்றை பொழுதுபோக்கிற்காக எல்லைமீறிப் பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம். இதனால், மாணவர்கள் தவறான பழக்கங்கள், பாவனைகள் போன்றவற்றாலும் ஒழுக்க ரீதியற்ற எண்ணங்களினாலும் செயல்களினாலும் பாதிக்கப்படுகின்றனர். இதன்போது அவர்களது நேரமும் வீணடிக்கப்படுகின்றது.

மாணவப்பருவத்தில் ஏற்படுத்திக்கொள்ளும் இத்தகைய எண்ணங்கள், பழக்கவழக்கங்கள் போன்றவை படிப்படியாக வளர்ச்சியடைந்து, பிற்காலத்தில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை உண்டாக்கிவிடுகின்றன. எனினும், இதனை அறியாதவர்களாகவே மாணவர்கள் இருக்கின்றனர்.

ஆகவே, ஒழுக்கத்தைப் பாதிப்பதாக அமையும் நிலைமைகள் மாணவர்களை உளரீதியாக தாழ்த்துவது மட்டுமன்றி, அவர்களது கல்வியையும் தாழ்த்தக் கூடியது. கல்வியை எவ்வளவுதான் முழுமையாகக் கற்றாலும் ஒழுக்கம் இல்லாத கல்வியால் எந்தவித பயனும் இல்லை என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

நாம் வாழும் சமூகம் ஒழுக்கத்தைக்கொண்ட மனிதரையே முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுகின்றது. எவ்வளவுதான் கல்வி கற்று இருந்தாலும் ஒழுக்கம் இல்லாதவர்களை சமூகம் பின்தள்ளியே வைக்கின்றது.

எனவே, எப்பொழுதும் எமது பண்புகளில் நல்லவற்றையே வளர்ச்சியடையச் செய்ய வேண்டும். தீய பண்புகளை அகற்ற வேண்டும். எதைப் பயன்படுத்தினாலும்



எதைக் கற்றாலும் எமது ஒழுக்கத்திற்கு எந்தவிதத்திலும் கெடுதல்கள் ஏற்படாத வண்ணம் அவதானமாக செயற்பட வேண்டிய பொறுப்பு மாணவர்களிடமே தங்கியுள்ளது.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# சர்வதேச விண்வெளி நிலையத்தின் சுற்றுப்பாதை உயர்த்தப்பட்டது

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு புதிய விண்வெளி வீரர்கள் செல்வதையிட்டு, அந்நிலையத்தின் சுற்றுப்பாதை ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதாக ரஷ்யாவின் விண்வெளி நிலையத் திட்டப் பணிப்பகம் அறிவித்துள்ளது.



ரஷ்யாவின் ஸ்வெஸ்தா சேவைக் கலமே இந்த மாற்றத்தை தனது அமுக்கிகள்மூலம் செயற்படுத்தியுள்ளது. விண்வெளி நிலையத்துக்கு 0.3 மீ/செ உந்துதல் கொடுப்பதற்காக ஸ்வெஸ்தா அமுக்கிகள் 19 செக்கன்களுக்கு செயற்படுத்தப்பட்டன என அத்திட்டத்தின் பேச்சாளர் கூறினார். இதன்மூலம் விண்வெளி நிலையத்தின் உயரம் ஒரு கிலோமீற்றர் உயர்ந்து 419.2 கிலோ மீற்றர் ஆக அதிகரித்துள்ளது.

விண்கலம் ஒன்றை விண்வெளி நிலையத்துடன் வெற்றிகரமாக இணைக்கவோ அல்லது விலக்கவோ நேரிடும் பட்சத்தில் பூமியின் புவியீர்ப்புடன் ஈடு செய்வதற்காக, பொதுவாக நிலையத்தின் சுற்றுப்பாதை இவ்வாறு மாற்றப்படுவது வழக்கமாகும்.


## விண்வெளித் தகவல்கள் - விண்வெளித் தகவல்கள்

# நான்கு சூரியன்களைக்கொண்ட புதிய கிரகம்

நான்கு சூரியன்களால் ஒளி பெறும் புதிய கிரகம் ஒன்றை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பிளெனட் ஹண்டர்ஸ் எனும் இணையத்தளமும் ஐக்கிய ராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற இடங்களில் இயங்கும் வானியல் ஆய்வு மையங்களும் இணைந்தே இந்தக் கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளன.



இந்த புதிய கிரகத்திற்கு பிளெனட் ஹண்டர்ஸ் இணையத்தின் பெயரைக் குறிக்கும் வகையில் 'பிஎச்1' (PH1)என்று பெயரிடப்பட்டுள்ளது. பூமியிலிருந்து சுமார் ஐந்தாயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கும் இந்தக் கிரகம், இரண்டு சூரியன்களைச் சுற்றிவருகின்ற அதேவேளை, அந்த இரண்டு சூரியன்களை வேறு இரண்டு சூரியன்கள் சுற்றிவருகின்றன. எனவே, இந்த குறிப்பிட்ட கிரகத்திற்கு நான்கு சூரியன்களின் ஒளியும் கிடைக்கின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இதுவரை ஒரு சூரியனால் ஒளியைப் பெறும் கிரகங்கள், இரண்டு சூரியன்களால் ஒளியைப் பெறும் கிரகங்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது நான்கு சூரியன்களால் ஒளியைப் பெறுகின்ற இந்த புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையானது, ஆய்வாளர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நீர் வடிந்து செல்ல வடிகால் அமைத்தல்.


படிமுறைப் பயிர்ச்செய்கை.



வேலிகள் அமைக்கப்பட்டுள்ள விதம்.


மண்ணரிப்புக்குள்ளாகியுள்ள விதம்.

# மண்ணரிப்பைத் தடுப்போம்!

*மழை, காற்று ஆகிய இயற்கைக் காரணிகளினாலும் விலங்குகள் மற்றும் மனிதர்களின் செயற்பாடுகளினாலும் தரையின் மேற்பகுதியில் உள்ள மண் அரிப்புக்குள்ளாகின்றது. அந்தவகையில் ஓரிடத்தில் இருக்கும் மண் வளமானது, பிரிதோர் இடத்திற்கு கழுவிச் செல்லப்படுவதை 'மண்ணரிப்பு' என்று கூறுவர். இதனால், ஏற்படும் பாதிப்புகளோ ஏராளம்.*

ஓராண்டில் மட்டும் கடலுக்குள் அரித்துச் செல்லப்படும் மண்ணின் அளவு 25 மில்லியன் மெற்றிக் தொன்களாக இருக்கின்றது. இதனால், உலகில் பயிர் செய்ய முடியாத நிலைமைக்குள்ளாகியுள்ள நிலத்தின் அளவு 2 பில்லியன் ஹெக்டெயர் ஆகும். எமது நாட்டில் ஏற்பட்டுள்ள மண்ணரிப்பினால் எமது மொத்த நிலப்பகுதியில் 23.5 சதவீதம் வளம் குறைந்த நிலப்பகுதிகளாக உள்ளன. எனவே, மண்ணரிப்பினைத் தடுப்பதற்கும் மண் வளத்தினைப் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகின்றது.



### மண் பற்றி தெரியுமா?

ஒட்சிசன், சிலிக்கன், அலுமினியம், இரும்பு, கல்சியம், சோடியம், பொட்டாசியம், மக்னீசியம் ஆகிய பிரதான மூலப்பொருட்களின் கலவையின் பிரதிபலனாகவே கனிய வளங்கள் உருவாகின்றன. இந்த கனிப்பொருட்கள், சேதனப்பொருட்கள், காற்று, நீர் என்பவற்றின் சிக்கலான கலவையே மண் ஆகும். இது தாவர வர்க்கம், வளரக்கூடிய மெல்லிய படையாகும். இந்த மண்ணை மணல், களி, துணிக்கைகள் என்று வகைப்படுத்த முடியும்.

### மண்ணரிப்பு என்றால் என்ன?


பனிமலைகள் வழுக்கிச் செல்லல், நீர் பெருக்கெடுத்து ஓடுதல், கடும் காற்று வீசுதல், விலங்குகள் அங்கும் இங்கும் திரிதல் போன்ற செயற்பாடுகளினால் மண் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்து செல்லப்படுதல் மண்ணரிப்பு எனப்படும்.

### மண்ணரிப்புக்கு ஏதுவான மேலும் சில காரணங்கள்

மண்ணரிப்புக்கு பல காரணங்கள் ஏதுவாக உள்ளன. அவற்றில் காடழிப்பு, விவசாய நடவடிக்கைகள், குடியிருப்புகளை அமைத்தல், தீ மூட்டுதல், எரிபொருள் அகழ்வு என்பனவற்றை பிரதானமாகக் குறிப்பிடலாம். இந்த செயற்பாடுகளின் போது, நிலப்பகுதி மறைக்கப்படாத தன் காரணமாக, மழைநீர் நேரடியாக நிலத்தில் விழுவதனாலும் நீர் அடித்துச் செல்லப்படுவதனாலும் மண்ணரிப்பு ஏற்படுகின்றது.

### மண்ணரிப்புக்கு உள்ளாவதால்....

* மண் வளமற்றதாகி விடும்.
* நீரேந்தும் பகுதிகளான ஆறு, குளம், வாவி போன்றவற்றின் கீழ்ப் பகுதிகளில் அரிப்புக்குள்ளான மண் சேருவதனால், அவற்றின் நீர் மட்டம் உயரும். இத்தகைய செயற்பாடுகள் தொடரும் நிலையில் அதிக மழைக் காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்.
* மண் சரிவு ஏற்படும்.
* தாவரத்தின் வேர்கள் வெளித் தெரிவதனால் வெகு விரைவில் அவை சரிந்து விடும்.
* மலைநாட்டுப் பகுதிகளில் தொடர்ந்து ஏற்படும் மண்ணரிப்பால் மண்சரிவு ஏற்பட்டு பல உயிர் சேதங்களும் வீதிப் போக்குவரத்தும் தடைப்படுதல்.
* கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்படும் மண்ணரிப்புக் காரணமாக, கடல் நீர் தரைப் பகுதிக்குள் வரும் அபாயம் உண்டாதல்.
* ஆறுகள் கரைபுரண்டோடுதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடலுக்கு ஒவ்வாத பயிர்ச்செய்கை

அதிக சரிவுகள்கொண்ட நிலப்பகுதிகளை பயிரிடலுக்குப் பயன்படுத்தல், கடும் மழை பொழியும் காலத்தில் பயிர்ச்செய்கைக்காக நிலத்தினைத் தயார்படுத்தல், நிலப்பகுதிக்குப் பொருத்தமற்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளல் என்பனவும் மண்ணரிப்புக்குக் காரணமாகின்றன.

## அதிகளவு காபன் உரம் இடல்

பயிர்களின் செழிப்பான வளர்ச்சிக்காக, அதிகளவு காபன் உரம் மண்ணுக்கு இடப்படும்போது, மண் துணிக்கைகளினுள் இருக்கும் பிணைப்பு நிலை நெகிழ்வுக்குட்படும். இதனால், மண்ணரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கின்றது.

## மண்ணரிப்பைத் தடுப்பதற்கான வழிமுறைகள்

1. மூடு பயிர்களைப் பயிரிடுதல்.
2. கல்வேலிகள் அமைத்தல்.
3. சம உயரக் கால்வாய்களை அமைத்தல்.
4. பெரிய மரங்கள் நடுதல்.
5. படிக்கட்டு முறை மூலம் பயிர்ச்செய்கை.
6. வரம்புகளை அமைத்தல்.

## மண்ணை வளப்படுத்தலும் மண்ணரிப்பைத் தடுத்தலும்

குறுகிய கால பயிர்ச்செய்கையின்போது, மண்ணை வளப் படுத்தவும் பாதுகாக்கவும் தாவரங்களின் இலைகள், சருகுகள், வைக்கோல் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். இதனால்,



சரிவு நிலங்களில் தாவரங்களை வளர்த்தல்.

மண்ணரிப்புத் தடுக்கப்படுவதோடு, மண்ணின் வளமும் அதிகரிக்கப்படுகின்றது.

மேலும் கறுப்பு நிற பொலிதீன்களினால் மண்ணின் மேற்பரப்பை மூடி வைப்பதன்மூலமும் மண்ணரிப்புத் தடுக்கப்படுகின்றது. இதனால், மண்ணீர் ஆவியடைதல் தடுக்கப்பட்டு, மண்ணீர் வளம் பாதுகாக்கப்படுகின்றது. அத்துடன் சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையையும் மேற்கொள்ளலாம். அதாவது, கத்தரி, மிளகாய் போன்ற குறுங்காலப் பயிர்ச் செய்கையின் பின்னர் பயறு, சணல், அவரை என்பனவற்றைப் பயிர் செய்து மண்ணின் வளத்தை அதிகரிக்கலாம். இதன்மூலம் மண்ணரிப்பையும் தடுக்கலாம்.



காடழிப்பு மண்ணரிப்புக்குக் காரணமாகும்.

சரிவான நிலப்பகுதிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும்போது, தரையின் அமைவுக்கு ஏற்ப பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளலாம். உதாரணமாக: தேயிலைத் தோட்டங்களில் கல் வேலிகளை அமைத்தல், வடிகால்களை அமைத்தல் போன்ற வழிமுறைகளைக் கையாளும்போது, மண்ணரிப்புத் தடுக்கப்பட்டு, மண் பாதுகாக்கப்படுகின்றது.

## கரைகளை அபிவிருத்தி செய்தல்

ஆறு, வாவி, ஏரி கரைப்பகுதிகளில் பொருத்தமான தாவரங்களை வளர்த்தல் வேண்டும். இதன்போது நீர் பயணிக்கும் பாதைகளில் அரிப்புக்குள்ளான மண் சேருவது தடுக்கப்படும். இவ்வாறு தாவரங்கள் வளர்க்கப்படுவதனால் கரைகளின் இருமருங்கிலும் மண்ணரிப்பு ஏற்படுவதனைத் தடுக்க முடியும்.

## மூடு பயிர்களைப் பயிரிடல்

ஒரே வகையான பயிரைப் பயிரிடும் போது, நிலப்பகுதி திறந்தவெளியாக இருக்கும் நிலை ஏற்படும். இதற்குத் தீர்வாக நிலத்தை மூடும் தன்மைகொண்ட மூடு பயிர்களை வளர்ப்பது நன்மையானது.

(இ)





கல்வேலி அமைத்தல்.

# 2012, தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



குருவிட்ட ஸாஹிரா வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.எம்.உமர், 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முகம்மத் நௌசாத் ஹாஜி தம்பதியரின் புதல்வராவார்.



ஏ.எச்.எப்.அனீஸ் தம்பதியரின் புதல்வி எஃப்.ஏ.சஹீமா ஸைய்னப், 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சேர்.ராசிக் பரீட் மு.வித்தியாலய மாணவியாவார்.



முஹம்மத் பௌசுல் அமீர் தம்பதியரின் புதல்வரான ஏ.எம்.அஸான், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குருவிட்ட ஸாஹிரா வித்தியாலய மாணவராவார்.



குளியாப்பிட்டி முஸ்லிம் வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.எஸ்.எஃப்.சிம்ரா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சிராஜுதீன்-யாரஹா தம்பதியரின் புதல்வியாவார்.



கு/அல்-இர்பான் நவோத்யா பாடசாலை மாணவியான ஏ.எஃப்.ஹம்தா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மொஹமட் அன்சார் தம்பதியரின் புதல்வியாவார்.



மொஹமட் இஸ்மாயில் தம்பதியரின் புதல்வரான எம்.ஐ.எம்.இமாஸ், 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குருந்துகொல்ல மத்திய கல்லூரி மாணவராவார்.



ஏ.பெர்ணாண்டோ தம்பதியரின் புதல்வியான எஃப்.மொறின் கிறிஸ்டினா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கு/அல்-இர்பான் நவோத்யா பாடசாலை மாணவியாவார்.



குருந்துகொல்ல மத்திய கல்லூரி மாணவியான எம்.ஏ.அக்லா சிரீன், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மொஹமட் அலி-மில்ஹானா தம்பதியரின் புதல்வியாவார்.



கு/அல்-இர்பான் நவோத்யா பாடசாலை மாணவரான எம்.என்.எம்.ஹம்தி, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மொஹமட் நஜீட் தம்பதியரின் புதல்வராவார்.



அப்துர் ரஹ்மான்-றஜிமுன்னிஸா தம்பதியரின் புதல்வரான ஏ.ஆர்.எம்.இஃப்திகார், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், குருந்துகொல்ல மத்திய கல்லூரி மாணவராவார்.



எம்.பி.எம்.நவ்பர் தம்பதியரின் புதல்வரான எம்.என்.அயாஸ் அஹமட், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கு/அல்-இர்பான் நவோத்யா பாடசாலை மாணவராவார்.



குருந்துகொல்ல மத்திய கல்லூரி மாணவியான எம்.எஸ்.எஃப்.சஸ்னா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சலீன்-முனவ்வரா தம்பதியரின் புதல்வியாவார்.





மே/மது/ வெலிப்பன்னை ரஹ்மானியா ம.வித்தியாலய மாணவர்களான பி.ரேஷ்மா-170 புள்ளிகள், எம்.எஸ்.எஃப்.ஸுரைஜா-159 புள்ளிகள், எம். ஆர். எம்.ருக்ஷான்-159 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவர்களுடன் பாடசாலை அதிபர் தேசமானி அல்ஹாஜ் ஏ.டபிள்யூ.எம். அஸார், வகுப்பாசிரியர்களான எம்.எம்.எஃப்.நஸ்லியா, ஏ.எஸ்.எஃப்.ரிஸ்னா மற்றும் எஸ்.மதனரூபி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் (சென்றவாரத் தொடர்ச்சி)

பெயர்: ............................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

23) வீட்டுத்தோட்டத்திற்கு வேலி அமைப்பதற்கு மிகப் பொருத்தமான தடி எது?

1. வேம்பு 2. கிளிசிறியா 3. நாவல் 4. இலுப்பை

24) மத்திய மாகாணத்தின் தலைநகரம் எது?

1. திருகோணமலை 2. யாழ்ப்பாணம்
3. கண்டி 4. பதுளை

25) தேசப்படங்களில் நதிகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தும் நியம நிறம் எது?

1. கபிலம் 2. சிவப்பு 3. கறுப்பு 4. நீலம்

26) வானில் எவ்வகையான முகிற்கூட்டம் உள்ளபோது வானம் தெளிவாகக் காணப்படும்?

1. திரள்முகில் 2. கருமுகில் 3. கீற்றுமுகில் 4. படைமுகில்

27) காதுகளை மையமாகக்கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் ஊடகம் எது?

1. 
2. 
3. 
4. 

28) வெளிநாட்டுத் தபாலை இட வேண்டிய தபாற்பெட்டியின் நிறம் எது?

1. சிவப்பு 2. பச்சை 3. கறுப்பு 4. நீலம்

29) அஞ்சல் அலுவலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளும் சேவை எது?

1. கடவுச் சீட்டைப் பெறுதல்
2. தேசிய அடையாள அட்டை பெறுதல்
3. காசுக் கட்டளைகளை அனுப்புதல்
4. துவிச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம் பெறல்

30) விளக்குத்திரி வழியே விரைவில் மேல்நோக்கிச் செல்லும் திரவம் எது?

1. தேங்காய் எண்ணெய் 2. பசு நெய்
3. கடுகெண்ணெய் 4. மண்ணெண்ணெய்

★ சரியான விடை எழுதுக.

31) காற்று வலு மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் மாவட்டம் எது?

..........................................................................

32) இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எங்கு அமைந்துள்ளது?

..........................................................................

33) வட மத்திய மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் எவை?

..........................................................................




34) இலங்கையின் மிக உயரமான மலை எது?

..........................................................................

35) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?

..........................................................................

36) கிராம சேவையாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளும் சேவைகள் 2 தருக?

1. ..........................................................................
2. ..........................................................................

37) இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?

..........................................................................

38) சிங்கள மக்களின் தேசிய உணவு எது?

..........................................................................

விளையாட்டுகளின் படங்கள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.

39) 

..........................................

40) 

..........................................

### சுற்றாடல் விடைகள்

*(ஒக்டோபர் 31, 07 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 2 | 21) 3 | 31) அம்பாந்தோட்டை |
| 02) 1 | 12) 2 | 22) 2 | 32) திருகோணமலை |
| 03) 2 | 13) 3 | 23) 2 | 33) அனுராதபுரம், பொலன்னறுவை |
| 04) 1 | 14) 3 | 24) 3 | 34) பிதுருதாலகால மலை |
| 05) 3 | 15) 3 | 25) 4 | 35) ஆனந்த சமரக்கோன் |
| 06) 2 | 16) 3 | 26) 3 | 36) 1. வதிவிடச் சான்றிதழ் |
| 07) 3 | 17) 3 | 27) 3 | 2. நற்சான்றிதழ் |
| 08) 2 | 18) 3 | 28) 4 | 37) குருதிச்சோகை |
| 09) 2 | 19) 1 | 29) 3 | 38) பாற்சோறு |
| 10) 2 | 20) 2 | 30) 4 | 39) வொலிபோல்/ கரப்பந்தாட்டம் |
| | | | 40) பல்லாங்குழி |



## புத்தகத்தின் பிறப்பு

முதன்முதலாக புத்தக வடிவில் ஆக்கங்கள் வெளியிடப்பட்டதானது, இற்றைக்கு 4000 வருடங்களுக்கு முன்னர் என்றே கூறப்படுகின்றது. எகிப்தியர்களின் பழங்கால எழுதுறுக்களே 'பெப்பிரஸ்' என்ற மர இலைகளில் எழுதப்பட்டு படைப்புக்களாகத் திகழ்ந்தன. பின்னர் இந்த இலைகள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டு புத்தக வடிவமாக அமைக்கப்பட்டது.

தொடர்ந்து ஐந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 'பெப்பிரஸ்' இலைக்குப் பதிலாக விலங்குகளின் தோல்களினால் செய்யப்பட்ட ஒருவகைத் தாள்களைக்கொண்டு புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன. ஏதேனும் ஒரு விடயத்தை எழுதி முடித்தவுடன், அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒன்றாகக் கட்டப்படும் அன்றைய செயற்பாடே, புத்தக வடிவமைப்பின் ஆரம்பம் என்று கூற முடியும். நாளடைவில் 'லெதர்' மூலம் புத்தகங்களுக்கு முன் அட்டை போடும் வழக்கம் ஏற்பட்டது. மனிதன் கடதாசியைக் கண்டுபிடித்ததன் பின்னரே, தற்போதைய நவீன புத்தகங்கள் பயன்பாட்டிற்கு வந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆர்மேனிய நாடாளுமன்றம்

# ஆர்மேனியா

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பலகட்சிக் குடியரசு.

**அமைப்பும் சுதந்திரமும்:** கி.மு. 190 இல் சுதந்திர ஆர்மேனிய அரசு; 1991 டிசம்பர் 21 ஆம் திகதி சுதந்திரம் இறுதியாக உறுதி செய்யப்பட்டது.

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய செப். 21.

**ஜனாதிபதி** (2008): செர்ஷ் சர்கிஸ்யன்.

**பிரதமர்** (2008): டிக்ரான் சர்க்ஸ்யன்.

**மொத்தப்பரப்பு:** 11,506 ச.மைல். (29,800 ச.கி.மீற்றர்)

**நிலப்பரப்பு:** 11,506 ச.மைல். (29,800 ச.கி.மீற்றர்)

**நிலப்பிரிவுகள்:** 10 மாகாணங்களும் 1 நகரமும்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** யெரெவன் (ஏரவன்)

**ஏனைய பெரிய நகரங்கள்:** வெனெட்ஸர், கையும்ரி, எபோவியன்.




**உயர் மலைச்சிகரம்:** அரகட்ஸ் மலை. (4,090 மீற்றர்)

**தாழ்மையம்:** டிபெட் நதி. (400 மீற்றர்)

**சனத்தொகை** (2012): 2,970,496.

**நாணயம்:** ட்ரேம்.

**மொழிகள்:** ஆர்மேனியன், யெஸிடி, ரஷ்யமொழி.

**இனக்குழுவினர்கள்:** ஆர்மேனியன், ரஷ்யன், குர்ட்ஸ் ஏனையோர்.

**சமயங்கள்:** ஆர்மேனிய அப்போஸ்தலத்துவ கிறிஸ்தவம், ஏனைய கிறிஸ்தவம், யெஸிடி.


**எழுத்தறிவு** (2012): 99.4%

**இணையத்தளக் குறியீடு:** am

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** 374

**தேசிய கீதம்**

Mer Hayrenik',
azat ankakh,
Vor aprel e dare dar



Yur vordik', ard kanch'um e
Azat, ankakh Hayastan… என ஆரம்பமாகின்றது.

## புவியியல்

தெற்கு காகசஸ் மலையில் அமைந்துள்ள ஆர்மேனியா, முன்னாள் சோவியத் யூனியனின் குடியரசுகளில் மிகவும் சிறியது. இதன் வடக்கில் ஜோர்ஜியாவும் கிழக்கில் அசர்பெய்ஜானும் தெற்கு மற்றும் மேற்கில் துருக்கி மற்றும் ஈரானும் எல்லைகளாக அமைந்துள்ளன. மடிப்பு மலைகள் மற்றும் எரிமலைகள் நிறைந்த நாடாகும். பொதுவாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களும் கடல் மட்டத்திலிருந்து சுமார் 6, 562 அடி உயர்வான பிரதேசங்களாகும். செவன் ஏரியே நாட்டின் மிகப்பெரிய ஏரியாகும். ஆராஸ், டிபெட், ஏஸ்டான் போன்ற முக்கிய நதிகளுடன் மேலும் பல நதிகள் இங்கு பாய்கின்றன.







## வரலாறு

உலகில் மிகவும் பழமையான நாகரிகங்களில் ஒன்றாகிய அரரட் ஆர்மேனிய நாகரிகத்தின் இருப்பிடம்தான் ஆர்மேனியா. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் ஆர்மேனிய பேரரசு உருவாக்கப்பட்டது. அக்காலத்தில் கிழக்கு ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியாவிலேயே, மிகவும் வலிமை பொருந்திய நாடாக ஆர்மேனியா திகழ்ந்தது. கிரேக்க, ரோமானிய, பாரசீக, பைசாந்திய, மொங்கோலிய, அராபிய, பேர்ஜிய, ஒட்டோமன் துருக்கிய, ரஷ்யா முதலிய சாம்ராச்சியங்களின் ஆதிக்கத்தின்கீழ் இந்நாடு இருந்துள்ளது. இறுதியாக 1828 இல் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டது. எனினும், நாட்டின் பெரும்பகுதி ஒட்டோமன் துருக்கியர் வசம் இருந்தது. 1894,1896-1915 வரையான காலப்பகுதிகளில் ஆர்மேனிய தேசியவாதிகளின் போராட்டத்தை நசுக்கும்பொருட்டு ஆயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் துருக்கியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். 1991 இல் சோவியத் குடியரசின் சிதறலைத் தொடர்ந்து சுதந்திரம் பெற்றது.


தேசிய இலச்சினை

## காலநிலை

ஆர்மேனியா, வெப்பம் நிறைந்த உலர் காலநிலையைக் கொண்ட கோடையையும் கடுங்குளிரான மாரியையும் கொண்டு விளங்குவதோடு, மாரியில் சில மாதங்களில் அதி உயர் பிரதேசங்களில் பனிப்படிவு வீழ்ச்சியும் ஏற்படும். பெரும்பாலான ஆர்மேனிய மலைச்சரிவுப் பிராந்தியங்களில் வசந்தகாலத்திலும் கோடையின் ஆரம்பத்திலும் அதிக மழைவீழ்ச்சி நிலவும்.

## கலாசாரம்

ஆர்மேனிய கலாசாரமானது, மிகவும் பழமையும் பாரம்பரிய முக்கியத்துவமும் நிறைந்தது. குறிப்பாக புவியியல், இலக்கியம், கட்டடக்கலை, நடனம் மற்றும் இசை போன்ற துறைகளைச் சூழ்ந்து அதன் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டது. அவர்களின் கலாசார விழுமியங்களில் சில விடயங்கள் எல்லைநாடுகளான ரஷ்யா, ஜோர்ஜியா, ஈரான் ஆகிய நாடுகளுடனும் மத்தியதரைக் கடல் நாடுகளான கிரீஸ், சைப்ரஸ் ஆகிய நாடுகளின் கலாசாரத்துடனும் ஒத்த தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது.

# தெரிந்து கொள்வோம்

- **கோல்புரூக் சீர்திருத்தம்மூலம் இலங்கை முன்னர் எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது? இன்று எத்தனை மாகாணங்கள் உள்ளன?**
  முன்னர் 5 மாகாணங்கள். தற்போது 9 மாகாணங்கள்.

- **துளை இசைக்கருவிகள் இனிமையான இசையை வழங்கக்கூடியன. அத்தகைய இசைக்கருவிகள் 5 இன் பெயரைத் தருக.**
  1. நாதஸ்வரம் 2. புல்லாங்குழல்
  3. மகுடி 4. சங்கு
  5. விசில்



- **செய்மதி அஞ்சல் நிலையங்கள் இன்று தகவல் தொடர்பாடலில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. இலங்கை செய்மதி தொடர்பாடல் அஞ்சல் நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?**
  பாதுக்க, கொழும்பு, மொறட்டுவ



- **ஒளி ஆண்டு என்றால் என்ன?**
  ஒளி (வெளிச்சம்) ஒரு வருடத்தில் செல்லும் தூரம்.

- **இசை ஸ்வரங்கள் 7 ஆகும். அவை ஸ.ரி.க.ம.ப.த.நி ஆகும். இவற்றை உச்ச ஸ்தாயியில் இசைக்கும் போதும் கீழ் ஸ்தாயியில் இசைக்கும்போதும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**
  உச்ச ஸ்தாயியில் இசைப்பது 'ஆரோகணம்'
  கீழ் ஸ்தாயியில் இசைப்பது 'அவரோகணம்'

- **மியன்மார் நாட்டின் பழைய பெயர் என்ன?**
  பர்மா

- **உலகின் மிக நீளமான நாடு எது?**
  சிலி





- **ஆசியாவின் நீளமான நதி எது?**
  யாங்ஸி நதி

- **கணிதத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர் யார்?**
  பைதகரஸ்

- **'Twinkle Twinkle Little Star' என்று ஆரம்பமாகும் சிறுவர் பாடலை இயற்றியவர் யார்?**
  ஜேன் டெய்லர்




தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## தொடர்பாடல் பதம்

Communis என்பது Common (பொது) எனப்பொருள்படும் இலத்தீன் சொல்லாகும். பொதுவாக்குதல் (To make common), பகிர்ந்தளித்தல் (To share) எனவும் இது பொருள்படுகின்றது. டென்னிஸ் மெக்குவில் (Denis Mcqil - 1969) பகிர்ந்தளிப்பதன் ஊடாக, பொதுமை உணர்வு வலுப்பெறுவதாக குறிப்பிடுகின்றார். தொடர்பாடல் என்ற பதம் பொதுவான என்னும் கருத்தைப் பிரதிபலிக்கும் இலத்தீன் சொல்லை அடிப்படையாகக்கொண்ட Communication என்னும் ஆங்கிலப் பதத்தினால் குறிப்பிடப்படுகின்றது. இப்பதம் ஒரு வினையை அதாவது, செயற்பாட்டைக் குறிக்கின்றது. Communicare என்னும் இலத்தீன் பதமானது பொதுமைப்படுத்தல், பகிர்ந்துகொள்ளல், அலைவழித் தொடர்பு (ஊடுகடத்தல்) எனவும் பொருள்படுகின்றது.

ஆங்கிலத்தில் Communication, Communications என்ற இரு பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்விருபதங்களும் வெவ்வேறு பொருள் விளக்கங்களை அளிப்பதாக அமைகின்றன. Communication என்பது தகவல் தொடர்பின் வழிமுறைகளைக் (Process of Communication) குறிக்கின்றது. Communications என்பது செய்தியைக் (Message Conveyed) குறிக்கின்றது.



**எட்வர்ட் சாபிர்** (Edward Sapir-1935) தகவலுக்கும், தகவல் தொடர்பின் வழிமுறைக்கும் இடையிலான வேறுபாடுகளை சுட்டிக்காட்டுகின்றார். தகவல் என்பதை எவ்வித கருவியின் குறுக்கீடும் இன்றி மக்கள் இயல்பாகவே சொற்கள், குறியீடுகள், மெய்ப்பாடுகள் ஊடாக தங்களுக்குள் பரிமாறிக்கொள்ளப்படும் தகவல்களை அவர் தகவல்கள் (Communications) எனவும், கருவியின் உதவியுடன் மக்கள் தங்களுக்குள் பரிமாறிக்கொள்ளும் தகவல்களை கருவிவழிப்பட்ட தகவல்கள் (Communication) என சுட்டிக்காட்டுகின்றார்.

## தொடர்பாடல் வரைவிலக்கணம்

தொடர்பாடல் செயன்முறை என்பது கவனித்துக் கேட்டல், பேசுதல், பார்வையிடுதல், கையெழுத்திடல், குறியீடுகளை உபயோகித்தல், அங்க அசைவுகள், முகபாவனை வெளிப்பாடுகள், வாசித்தல், எழுதுதல்மூலம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் செயன்முறையைக் குறிப்பதாகும்.


மனிதத் தொடர்பு என்பது பொருள் உள்ள செய்தியை இரு நபர்களிடமோ, ஒரு குழுவினரிடமோ, பொது மக்கள் கூட்டத்துடனோ, பரிமாறிக்கொள்ளும் செயன்முறையுடன் தொடர்புபட்டதாக அமைகின்றது. (தொடரும்)


**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
**ஆசிரியர் - தொடர்பாடல் ஊடகக்கல்வி யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

## தளிர்கரம்

வழங்குபவர்: ஆசிரியை ரோஸ்மலர்

பொருத்தமான படங்களை கோடிட்டு இணைக்க.






புள்ளிகளை இணைத்து படத்திற்கு நிறந்தீட்டுக.



இடது பக்கத்திலுள்ள உருவை ஒத்த வலது பக்க உருவிற்கு (✓) அடையாளமிடுக.



தொப்பி ஒன்று செய்வோம். இடைவெளிகளை இணைத்து தொப்பியை உருவாக்கி நிறந்தீட்டுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகிள் வெளியிட்டுள்ள புதிய சாதனங்கள்




நியூயோர்க்கில் இடம்பெறவிருந்த நிகழ்வொன்றில் வெளியிடப்படவிருந்த கூகிளின் புதிய சாதனங்களின் அறிமுகம், அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள 'செண்டி சூறாவளி' காரணமாக நிறுத்தப்பட்டது. இருந்தாலும், அந்தப் புதிய சாதனங்கள் பற்றி ஒரு வலைப்பதிவின் மூலமாக கூகிள் அறிமுக வெளியீட்டைச் செய்துள்ளது.

அந்த வலைப்பதியில் வெளியிடப்பட்டுள்ள சில முக்கியமான சாதனங்கள் பற்றி இங்கு காண்போம்.




* **Nexus 4 திறன்பேசி (smartphone):** LG நிறுவனத்தோடு இணைந்த வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. 42 அங்குல திரையைக் கொண்ட இந்தக் கைப்பேசியில், quad-core புரோசசர் காணப்படுகிறது. அன்ரொயிட்டின் புதிய பதிப்பான 4.2 Jelly Bean ஐக் கொண்டுள்ள இந்தச் சாதனம், இம்மாதம் 13 ஆம் திகதி விற்பனைக்கு வருகின்றது. இதன் விலை 299 அமெரிக்க டொலர்களாகும்.

* **Nexus 7 கைக்கணினி:** WiFi உடன் இணைந்து இயங்கும் தகவுடையதாக இருக்கிறது. 16GB மற்றும் 32GB ஆகிய கொள்ளளவில் கிடைக்கக் கூடிய இந்தக் கைக்கணினியானது, முறையே 199 மற்றும் 249 அமெரிக்க டொலர்களுக்கு இம்மாதம் 13 ஆம் திகதி விற்பனைக்கு வரவுள்ளது.

* **Nexus 10 கைக்கணினி:** Samsung நிறுவனத்தோடு இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது. 2560 x1600 பிக்ஸல்கள் விஸ்தீரணமான திரையைக் கொண்டுள்ள இந்தக் கைக்கணினி, 10 அங்குலத்திலான திரையைக் கொண்டுள்ளது. இம்மாதம் 14 ஆம் திகதி விற்பனைக்கு வரும் இந்தச் சாதனம், 16GB, 32GB ஆகிய சேமிப்பு கொள்ளளவில் கிடைக்கின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, நொவெம்பர் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## விஜய் நுட்பம்

தருவது தாரிக் அஸீஸ்

2012, நொவெம்பர், 07, புதன்கிழமை




# கணினி சொல்வளம் பெருகட்டும்!

கணினி தொடர்பான சொற்கள் பற்றிய புரிதல்கள் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டியது அவசியமானதாகும். ஒவ்வொரு சொல்லும் உண்மையில் எதனைக் குறித்து நிற்கின்றது என்பதை அறிகின்றபோது, அந்தச் சொற்களைக் கொண்ட வசனத்தின் மொத்தத் தொனியும் எமக்கு ஏற்படுகின்றது. அதற்கமைய சில முக்கியமான சொற்கள் பற்றிய விளக்கத்தை இங்கு நோக்குவோம்:




**Bit:** இரண்டு எண்களை மட்டும் கொண்ட சேமிப்புக் கூறு ஆகும். அதாவது, துவித எண்முறையில் 0,1 ஆகிய இரண்டு எண்களையும் தன்னகம் கொண்டுள்ள சேமிப்புக்கூறு.

**Bios:** இந்தச் சொல்லின் விரிவாக்கம் Basic Input/ Output System என்பதாகும். இது கணினியில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மென்பொருளாகும். கணினியின் வன்தட்டு (Hard disk) இல்லாத நிலையிலும் கணினி தொடர்பான விடயங்களை அறிந்துகொள்வதற்கு இது ஆதாரமாகக் காணப்படும்.

**Boot:** ஒரு கணினியை on செய்வதனை இது குறித்து நிற்கும். reboot எனச் சொன்னால், ஒரு கணினியை off செய்து, மீண்டும் இயல்பாக on செய்வதைக் குறிக்கும்.

**Driver:** கணினியில் இணைக்கப்பட்டுள்ள, பிற வன்பொருள்கள் கணினியோடு சேர்ந்து நேர்த்தியாக தொழிற்படுவதற்கான வாய்ப்பை இயைபாக்கித்தரும் மென்பொருளே driver எனப்படும். குறிப்பாக, கணினியில் இணைக்கப்பட்டுள்ள அச்சுப்பொறி (printer), சுட்டி (mouse), விசைப் பலகை (keyboard) என்பன தமக்கான driver கணினியில் நிறுவப்பட்ட நிலையில், அற்புதமாகக் காரியம் செய்யும்.


**Spam:** இவை 'எரிதங்கள்' என வழங்கப்படும். உங்கள் மின்னஞ்சலுக்கு வரும் வேண்டாத விருந்தாளிகள் என்றுகூட வைத்துக்கொள்ளலாம். வணிக நோக்கத்தின் பொருட்டு, உங்களுக்கு தங்களைப் பற்றிய தரவுகள் அனுப்பும் மின்னஞ்சல் இதுவாகும்.

# Google இன் புதிய விடயங்களை அறிதல்

நீங்கள் அறிந்து வைத்திருப்பது போலவே, Google நாளாந்தம் பல்வேறு வகையான புதிய வசதிகளை தமது சேவைகளில் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அத்தோடு, அவை புதிதாக சேவைகளையும் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறது. Google இன் குறித்த சேவைக்கான வலைப்பதிவை வாசிப்பதன் மூலம் அவை பற்றி அறிந்து கொள்ள முடியும். ஆனால், அதையும் தாண்டி, ஒரே இடத்தில் அத்தனை சேவைகளைப் பற்றியும் அறிந்துகொள்ளும் வகையில், விசேடமான தளமொன்றை Google ஆரம்பித்துள்ளது. அதன் பெயர் 'Google New' என்பதாகும். இனி, நீங்கள் Google பற்றிய அனைத்துப் புதிய விடயங்களையும் http://www.google.com/about/ தளத்தினூடாக அறிந்துகொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LogMeIn மற்றும் Splashtop ஆகிய சேவைகளைப் போன்று இயங்கி, இன்னொரு கணினியிலிருந்து கொண்டு ஒரு கணினியின் இடைமுகத்தை இயக்குகின்ற சாத்தியத்தை Google Chrome இணைய உலாவி தன்னகம்



# கூகிள் க்ரோம் ஊடாக கணினித் திரையைப் பகிர்தல்




புதிதாகக் கொண்டுள்ளது.


ஒரு வருடகாலமாக பரீட்சாத்தமாக செயலில் இருந்த Chrome Remote Desktop என்ற நீட்டிப்பு (extension) இப்போது உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, Chrome இணைய உலாவியிலிருந்தபடியே, இன்னொரு கணினியின் இடைமுகத்தை இணைத்துக்கொள்ள முடியும்.

இன்னொரு கணினியின் desktop ஐ இணைப்பின்மூலம் பெறுவதோடு, ஒலி வடிவத்தில் உரையாடல் பகிர்வையும் இதன்மூலம் மேற்கொள்ள முடியும். அதேவேளை, Windows பணிசெயல்முறையைப் பாவிக்கும் பயனர்கள் தங்கள் கணினியிலிருந்தபடியே, இணைப்பை ஏற்படுத்தும் கணினியில் copy மற்றும் paste செய்துகொள்ளக்கூடிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கூகிள் க்ரோமின் Chrome Webstore இற்கு சென்று, Chrome Remote Desktop எனத் தேடுவதன் மூலம், இந்த நீட்டிப்பை உங்கள் க்ரோம் இணைய உலாவியில் நிறுவிக்கொள்ள முடியும்.

# DOCX கோப்பை IE இல் Open செய்தல்

Microsoft நிறுவனத்தின் மிகப் பிந்திய Office Package ஆன, Microsoft Office 2007 இல்










அதன் கோப்புகள் யாவும் docx என்ற நீட்டிப்புடனேயே சேமிக்கப்படும். இதனை Open செய்து பார்ப்பதற்கு எம்மிடம் Microsoft Office 2007 மென்பொருள் தொகுதி கணினியில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு Microsoft Office 2007 நிறுவப்படாமலேயே DOCX கோப்புகளை IE இல் Open செய்து பார்ப்பதற்கான வழியொன்று உள்ளது. அது என்னவென இங்கு நோக்குவோம்.

முதலில் நீங்கள் உங்களிடமுள்ள DOCX File ஐ ZIP File ஆக மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்காக குறித்த .docx என்ற extension ஐ .zip என்ற extension ஆக மாற்ற வேண்டும். எடுத்துக்காட்டாக, myfile.docx என்பதை myfile.zip என மாற்ற வேண்டும்.

பின்னர், மாற்றிப் பெறப்பட்ட zip folder ஐ unzip செய்துகொண்டால் குறித்த unzip folder இல் word என்ற folder ஐக் காணலாம். அதனுள் document.xml என்ற File காணப்படும்.

அதனை, IE (Internet Explorer) மூலம் Open செய்து குறித்த docx file இல் காணப்பட்ட text ஐ அறிந்துகொள்ளலாம். இதனைச் செய்துதான் பாருங்களேன்.



# 'SSD' என்றால் என்ன?




வன்தட்டுகள் எனப்படும் Hard disk களுக்கு மாற்றீடாக வந்துள்ள புதிய ரக சேமிப்பு ஊடகமே SSD ஆகும். Solid State Drive என்பதே இதன் விரிவாக்கம் ஆகும்.




வன்தட்டுக்களுக்கும் SSD களுக்கும் இடையே காணப்படும் மிகப் பிரதான வேறுபாடு யாதெனில், SSD களில் அசையக்கூடிய எந்தவகையான உதிரிப்பாங்களும் இல்லை என்பதாகும். அதேவேளை, வன்தட்டில் சுழன்று அசையும் தட்டுக் காணப்படும். இதுவே, அந்த வன்தட்டில் தகவல்களை சேமிக்கவும் பெற்றுக்கொள்ளவும் ஆதாரமாக அமையும்.

SSD ஆனது தனித்துவமாக நினைவகக் கூறுகளை, தகவல்களை சேமிக்கும் பொருட்டு தன்னகம் கொண்டுள்ளது. பொதுவாக, SSD ஐ அளவில் பெரிய Memory Stick எனச் சொல்லலாம்.

வன்தட்டுக்களை விடவும், SSD உச்ச குணாதிசயங்களைப் பாவிப்பதனால் அதிக நன்மைகளையும் வழங்குகின்றது. அவையாவன:

* வன்தட்டுக்களைவிட மிக மிக வேகமாக SSD தொழிற்படும்.
* SSD இயங்குகின்றபோது, ஏற்படும் ஒலி மிகவும் குறைவானதாகும்.
* SSD இல் அசையும் பகுதிகள் இல்லாததனால், அது வேகமாக இயங்கும்.
* வன்தட்டைவிட குறைந்தளவு சக்தியையே SSD பயன்படுத்தும்.
* குறைந்த சக்தி பயன்படுத்துவதால், உமிழும் வெப்பமும் குறைவு. நேர்த்தியாகவும் வேகமாகவும் தொழிற்படும்.
* Flash memory ஐ SSD கொண்டுள்ளதால், தரவுகளைத் தேடிப்பெறுவது மிகவும் சுலபமாகும்.
* SSD ஆனது, வன்தட்டுகளை விடவும் அளவில் மிகவும் சிறியது.

இது இப்படியிருக்க இதன் விலையோ, சாதாரண வன்தட்டுக்களைவிட அதிகமானதாகும். அத்தோடு, இதுவரையில் SSD இல் உருவாக்கப்பட்டுள்ள உச்ச சேமிப்பு கொள்ளளவு 600GB ஆகும். இது Intel நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனை மொழி



*தவறுகளை ஒப்புக்கொள்ள மறுப்பதைவிடப் பெரிய அவமானம் வேறில்லை*

*- மகாத்மா காந்தி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய பக்கத்தில் இணைப்பு

இணையத் தளங்களில் Links (இணைப்புகள்) பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. அவற்றை சொடுக்குவதனால், அது இணைக்கப் பட்டுள்ள தளத்தின் பக்கத்திற்குச் செல்ல முடியும். ஆனாலும் நாம் வாசித்துக் கொண்டிருக்கும் ஒரு விடயத்தின் இடையிலும் இணைப்புள்ளது. அதனைச் சொடுக்கி, வாசிக்கின்ற பக்கத்தை விட்டு நீங்கி, அந்தப் பக்கத்தைக் காண நீங்கள் விரும்பவில்லையென்றால் என்ன செய்யலாம்? இணையத்தளங்களை, நாம் காண்பதற்காக உபயோகிக்கும் இணைய உலாவியில் இப்படியான சந்தர்ப்பங்களில், இணைப்புகளை இன்னொரு புதிய பக்கத்தில் அல்லது புதிய கீற்றில் (Tab) திறந்துகொள்வதற்கான இலகுவான சுருக்க வழி காணப்படுகின்றது. குறித்த பக்கத்தில் காணப்படும் இணைப்பானது, இன்னொரு புதிய சாளரத்தில் (Window) திறக்க வேண்டுமெனின், Shift Key ஐ அழுத்திய வண்ணம் இணைப்பில் சொடுக்கினால் போதும்! அவ்வாறே, குறித்த பக்கத்தில் காணப்படும் இணைப்பை இன்னொரு புதிய கீற்றில் (Tab) திறக்க, Ctrl Key ஐ அழுத்திய நிலையில் அந்த இணைப்பில் சொடுக்குதல் வேண்டும். மிக இலகுவாக செய்யக் கூடிய இந்த விடயமானது, வினைத்திறனாக கருமமாற்ற உற்ற துணை புரியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

*இணையப்பக்கங்களில் காணப்படும் இணைப்புகள் பொதுவாக hyperlink அல்லது link என வழங்கப்படும். இந்த hyperlink பிரிதோர் இணையப்பக்கத்திற்கான இணைப்பாகவோ அல்லது ஒரே பக்கத்தில் காணப்படும் குறித்ததோர் இடத்திற்குரிய இணைப்பாகவோ காணப்படலாம்.*

Microsoft புதிதாக வெளியிட்டுள்ள பணிசெயல்முறைமையான Windows 8 பற்றி கடந்த 'நுட்பம்' பகுதியில் விரிவாகக் கண்டோம். இதன்படி, புதிய பணிசெயல்முறைமையில் desktop என்பதே Metro UI

## Windows 8 இல் மீண்டும் Google வேண்டுமா?




என்ற முகப்பினால் பிரதியிடப் பட்டுள்ளது.

எமக்குத் தேவையான -ஏற்கனவே பயன்படுத்திய செயலிகளை (Applications) Windows 8 இலும் அவ்வாறே பயன்படுத்துவதற்கு ஒரு சில படிமுறைகளைச் செய்ய வேண்டும்.

புதிதாக நிறுவப்பட்டுள்ள Windows 8 இல், நீங்கள் முன்பு போன்றே கூகிள் தேடலின் இடைமுகச் சுருக்கச் சுட்டியை Metro UI இல் தக்கவைத்துக்கொள்வதை, கூகிள் இலகுவாக ஆக்கி அதனை உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது.

இதன்படி, வெறும் இரண்டு நிமிடங்களில், கூகிளை Metro UI இல் இடம்பெறச் செய்து, உங்கள் தேடல்களை இலகுவாக மேற்கொள்ள முடியும். இதனைச் செய்வதை சாத்தியமாக்கும் தகவை வழங்கும் கூகிள் இணையத்தளத்தின் முகவரி: http://www.google.com/homepage/windows8/ என்பதாகும்.



# கணினி பற்றிய அடிப்படை அறிவை பெற்றோருக்கு வழங்குவோம்

கணினியின் தேவை மற்றும் இணையத்தின்மூலம் தங்கள் கருமங்களை ஆற்றும் வழக்கம் மக்களிடையே நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது. ஆக, கணினியை அனைவரும் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டிய கட்டாயத்திற்குள் காலம் வந்துவிட்டது எனலாம். இதேவேளை, கையடக்கத் தொலைபேசிகளின் பிந்திய பதிப்புகள் பலதும் கணினி போன்றே தொழிற்படுவதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். இந்த நிலையில், புதிதாகக் கணினியை உபயோகிக்கத் தொடங்கியிருக்கும் உங்கள் பெற்றோருக்கோ அல்லது உறவினர்களுக்கோ அது பற்றிய அடிப்படை அறிவை வழங்குவது அவசியமாகின்றது.

எனவே, அந்த வேலையை இலகுவில் செய்வதற்காக Google புதிய தளமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் பெயர் 'Teach Parents Tech' என்பதாகும். இந்தத் தளத்தின்மூலம் கணினி சார்பான அடிப்படை விடயங்களை எவ்வாறு செய்வதென்பதை விளக்குவதாக அமைந்த காணொளிகளை உங்கள் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் அறிமுகப்படுத்தலாம். இதன்மூலம் அவர்கள் எளிதாக கணினி பற்றிய விடயங்களை அறிந்துகொள்ள வாய்ப்பேற்படும். அந்த தளத்தினூடாக, உங்களின் அன்புக்குரியவர்களுக்கு கணினி பற்றிய விடயங்களைக் கற்றுக்கொடுங்கள். அதற்கான இணைப்பு http://www.teachparentstech.org/ என்பதாகும்.


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக செயலிகளை மூடுதல்




உங்களின் கணினியை வேகமாக நிறுத்திவிட வேண்டுமா? அது மிகவும் இலகுவானது. சுட்டியை (mouse) அசைத்துக்கொண்டு செயற்படுவது அவசியமற்றது. ஆகவே, உங்கள் கணினியில் செயலில் இருக்கும் செயலிகளை விரைவாக மூடுவது எப்படி என இங்கு காண்போம்.

**எல்லாச் செயலிகளையும் மூடுவதற்கு...**

விசைப்பலகையின் (keyboard) சுருக்க வழிகளின்மூலம், விரைவாக கணினியில் இயங்கும் அனைத்து செயலிகளையும் மூடிவிடலாம். இதற்கு அதிக நேரம் எடுக்காது. இதனைச் சாத்தியமாக்க பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றலாம்.

* Ctrl+Alt+Del ஆகிய key களை ஒரே நேரத்தில் அழுத்த வேண்டும்.
* அப்போது Task Manager dialog box தோன்றும்.
* Alt+T ஆகிய key களை ஒருமிக்க அழுத்த Task Manager இன் Application தோன்றும்.
* அதில் மேல் மற்றும் கீழ் அம்புக்குறிகளை அழுத்தி, மூடிவிட எண்ணும் செயலியை தெரிவுசெய்யலாம். செயலிகளைத் தெரிவுசெய்ய, Shift key உடன், மேல் மற்றும் கீழ் அம்புக்குறிகளைப் பயன்படுத்தலாம்.
* இவ்வாறு தெரிவுசெய்த பின்னர், Alt+E ஆகிய key களை ஒருமிக்க அழுத்த, தேர்வு செய்யப்பட்ட அத்தனை செயலிகளும் Close ஆகிவிடும். மீண்டும் Alt+F இனை அழுத்தினால் Task Manager மூடப்பட்டுவிடும்.

இந்த முறைமையில் நீங்கள் செயலிகளை மூடப் பழகினால் வெறும் 10 செக்கன்களுக்குள் தேவையான செயலிகளை Close செய்து கொள்ள முடியும்.

# கணினியை Shutdown செய்வதை துரிதமாக்கல்

வழமையாக கணினியை Shutdown செய்வதற்கு start menu விற்குச் சென்று அங்கு Shutdown என்ற தேர்வை தெரிவுசெய்து Shutdown செய்திருப்பீர்கள். ஆனாலும், ஒரு கணினியை Shutdown செய்வதற்கு இதுபோலவே மேலும் பல வழிகள் உள்ளன.

இங்கு நாம் Windows 7 பணிசெயல்முறைமையில் விசைப்பலகையைப் பயன்படுத்தி எவ்வாறு Shutdown செய்யலாம் என பார்ப்போம்.

win key ஐ அழுத்திப் பின்னர் வலது அம்புக்குறியை அழுத்துங்கள். பின்னர் Enter செய்தால் போதுமானது. கணினி Shutdown ஆகிவிடும். இவ்வாறு Shutdown செய்கின்ற நிலையில் கணினியில் ஏதேனும் செயலிகள் செயலில் இருந்தால், அது பற்றிய அறிவிப்பு திரையில் தோன்றும். அதனை வாசித்து பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதானது சேமிக்கப்படாத கோப்புகளை சேமித்துக் கொள்வதற்கான வழியை வழங்கும்.








# இற்கு IE10 வருகிறது!

க்ரோசொ·ஃப்ட்டின் புதிய பணிசெயல் முறைமையான Windows 8 உடன் இணைந்தாற்போல், Internet Explorer இன் 10 ஆம் பதிப்பு (IE10) நிறுவப்பட்டு வெளியிடப்பட்டது. ஆனாலும், Windows இன் முன்னைய பதிப்புகளான Windows XP, Vista மற்றும் Windows 7 ஆகியவற்றுக்குப் பொருத்தமான வகையில் IE10 மைக்ரோசொ·ஃப்ட்டினால் வெளியிடப்படவில்லை.




மைக்ரோசொ·ஃப்ட் நிறுவனம்Windows 7 இற்கு IE10 ஐ வெளியிடவுள்ளதாக அண்மையில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதன்படி, இம்மாதம் (நொவெம்பர்) நடுப்பகுதியில் இதன் பரீட்சார்த்த முன்னோட்டமான IE10 பதிப்பு வெளியிடப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பரீட்சார்த்தமான வெளியீட்டின் போது, பயனர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் யாவும் நிவர்த்தியாக்கப்பட்டு முழுமையான செயலாற்றுகை நிலையிலுள்ள IE10 ஆனது Windows 7 இற்காக வெளியிடப்படலாம்.

Internet Explorer 10 ஆனது, பல குணாதிசயங்களைக் கொண்ட நிலையில் வெளியாகியுள்ளதோடு, அது IE இன் முன்னைய பதிப்புகளில் காணப்படும் வழுக்களுக்கான (Bug) நிவர்த்திகளையும் கொண்டுள்ளது. அத்தோடு, அதன் இடைமுகத்தில் ஒரு சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இணையத்தில் சுருக்கமாகத் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளவும் உரையாடலில் ஈடுபடவும் தேவையான சாத்தியங்களை ட்விட்டர் என்ற சமூக வலைத்தளம் வழங்குகின்றது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

# ஒரு நாளைக்கு அரை பில்லியன் கீச்சுகள்



இந்த இணையச் சேவையில் பரிமாறப்படும் ஒரு தகவல் 140 எழுத்துக்களை மாத்திரமே கொண்டிருக்க வேண்டும். இந்த ஒவ்வொரு தகவலும் tweet என அழைக்கப்படும். இது தமிழில் 'கீச்சு' என வழங்கப்படுகின்றது.

கடந்த வாரம் லண்டனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ட்விட்டர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) டிக் கொஸ்டோலோ, தமது நிறுவனம் ஒரு நாளைக்கு சுமார் அரை பில்லியன் கீச்சுகளை தமது சேவையகமூடாக வெளியிட்டு வருவதாகத் தெரிவித்தார்.

இத்தகவலுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக வெளியான ட்விட்டரின் அறிக்கையின்படி, அது நாளுக்கு 400 மில்லியன் கீச்சுகளை ட்விட்டர் மூலம் பயனர்களிடையே பகிர்ந்துகொள்வதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, ட்விட்டரில் விருப்பத்துக்குரிய கீச்சுகளை, குறித்து வைக்கின்ற 'Favorite' எனும் வசதியானது, விரைவில் 'Like' என்ற வகையில் இனங்காணப்பட்டு, வித்தியாசமான இடைமுகத்தைப் பெற்றுக்கொள்ளும் எனவும் கொஸ்டோலோ தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்கு எவ்வாறு தயாராகலாம்?


மாணவர்களைப் பரீட்சைக்கு தயார் செய்தல் என்பது மாணவர்களின் எதிர்காலம் மற்றும் பரீட்சை தொடர்பாக அவர்கள் கொண்டுள்ள அச்சத்தைப் போக்கி சிறந்த பெறு பேற்றினைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறையாகும். இன்று பலவிதமான வழிகாட்டுதல்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டாலும் பொருத்தமான



பரீட்சை வழிகாட்டல் முறையாக PQRST முறையில் காணப்படுகின்றது. இதன் விரிவான விளக்கமானது,

Preview - மதிப்பீடு செய்தல்
Question- கேள்வி கேட்டல்
Read - வாசித்தல்
Summary- சுருக்கமளித்தல்
Test - பரீட்சித்தல்

இவற்றினூடாக, மாணவர்களின் கற்றல் நுட்பத்தினை இலகுவாக வளர்த்துக்கொள்ள முடியும். மேலும், மாணவர்களின் கற்றல் ஆர்வத்தினை வளர்த்துக்கொள்வதற்கு சில நுட்பங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.



✱ நினைவு படுத்தல் ✱ கவனயீர்ப்பு ✱ ஒழுங்கமைப்பு ✱ சிந்திக்கும் ஆற்றல் ✱ ஈடுபாடு ✱ விளங்கிக் கற்றல் ✱ சிறு சிறு பகுதிகளாகக் கற்றல்

மேலும், உளவியல் அறிஞர்களான சிம்சன், நெஸ்ற் ஆகியோரின் ஆய்வின் பிரகாரம் பின்வருவன கற்றல் நுட்பங்களாக முன்வைக்கப் படுகின்றன.

✱ சுருக்கக் குறிப்புகளை எழுதுதல் ✱ கற்கும் பாடத்தின் பிரதான கருத்துக்களைப் பிரித்தெடுத்தல் ✱ சில தரவுகளை அட்டவணைப்படுத்தல்.
✱ முக்கியமான சொற்பதங்களை அடிக்கோடிடல் அல்லது Highlight பண்ணுதல்.
✱ பொருத்தமான பாடப்பகுதிகளைத் தனியாகவும் குழுவாகவும் கற்றல்.

மேலும், கற்கின்ற விடயங்களை நினைவில் வைத்துக்கொள்ளக் கையாளும் வழிமுறைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

✱ ஒழுங்குபடுத்திக் கற்றல் ✱ முன்னர் படித்தவற்றைப் பின்னர் படித்ததுடன் ஒப்பீடு செய்தல் ✱ உதாரணங்களைச் சிந்தித்தல் ✱ தனக்குக் கேட்கும் வகையில் வாசித்தல் ✱ நண்பர்களுடன் கற்றதைப் பகிர்தல் ✱ இடைவெளி விட்டுக் கற்றல் ✱ திரும்பத் திரும்பக் கற்றல்.

மாணவர்கள் பரீட்சைக் காலங்களில் மிக முக்கியமாக தவிர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு உண்டு. அவையாவன;

✱ சோம்பல் ✱ தூக்கம் ✱ சினிமா ✱ இசை.

எனவே, பெற்றோரும் ஆசிரியர்களும் இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும். இவ்விடயங்கள் மாணவர்களின் நினைவாற்றலைக் குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாணவர்களின் கற்றலைப் பாதிக்கின்ற ஏனைய காரணிகள்;

✱ நுண்மதி (Intelligent) ✱ உடலியற் பண்புகள் ✱ தனியாள் வேறுபாடுகள் ✱ கற்றல் வேகம் ✱ நுழைவுத் தேர்ச்சிகள் ✱ எதிர்பார்ப்பு மட்டம் ✱ கற்கும் ஆற்றல் ✱ சமூக, பொருளாதாரப் பின்னணி.

பாடசாலைகளில் இன்று பயன்படுத்தப்படும் தனிக்கற்பித்தல் முறைகள் (Individual Methods), விளையாட்டு முறைகள் (Playway Methods), செயல் முறைகள் (Activity Methods), காட்சிப்பொருட்களைப் பயன்படுத்திக் கற்பித்தல் போன்றவையாவும் உளவியலின் அடிப்படையில் எழுந்த முறைகளேயாகும். கல்வியென்பது ஒரு பாடப்பொருளைப் போதித்தல் மட்டுமன்றி, கல்வியின் குறிக்கோள் ஒரு மாணவனின் முழு வளர்ச்சியேயாகும். பாடசாலை என்பது சமுதாயத்தின் ஒரு பகுதியாகும். சமுதாயத்தினர், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரது முழு ஒத்துழைப்பினையும் பெற்று மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காக பாடசாலை சிறப்பாக செயலாற்ற கல்வி உளவியல் ஆசிரியர்கள், பெற்றோர்கள் உதவி புரிதல் வேண்டும்.

தொகுப்பு:
**Rinos Hanifa**
உளவியல் உளவளதுணையாளர்
BSW, Special in Counseling,
Dip in. Psychological Counseling.

மேலும் உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் sms ஊடாக கல்வி, வாழ்க்கை, வழிகாட்டல்கள், IT Tips (தகவல் தொழில்நுட்ப துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள் அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களைப் பெற்றுக் கொள்ள பின்வருமாறு செயற்படுத்தவும்.

Write Message
REG இடைவெளி TOP என Type செய்து 77000 எனும் இலக்கத்திற்கு அனுப்பவும்

## பாட்டி சொன்ன கதை

கதை, ஓவியம்: சதாசிவம் சிவகுமார்

### பூதத்தை விரட்டிய சிறுவன்

அங்கம் - 06




தொடரும்

## மாணவர் கழகம்


அங். இல: 4844
எஃப்.ஆயிஷா,
பஞ்சிகாவத்தை,
கொழும்பு-10.


அங். இல: 4845
கே.தினேஸ்,
ஹல்வதுரை தோட்டம்,
இங்கிரிய.


அங். இல: 4846
எஃப்.ஸாயிலா,
ரமுகந்தன,
ரதீகம.


அங். இல: 4847
இ.மனோரஞ்சன்,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.


அங். இல: 4848
ஆர்.பிரகல்ராஜ்,
நாயபெத்த தோட்டம்,
பண்டாரவளை.


அங். இல: 4849
ஸாமில்,
வட்டதெனிய,
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்டியின் ஆட்சியைக் கைப்பற்ற சூழ்ச்சி

கண்டிப் பிரதானிகளில் ஒருவனாகிய பிலிமத்தலாவையும் அவனது குழுவினரும் கண்டி மன்னனாகிய இராஜசிங்கனை ஆட்சியிலிருந்து நீக்க முயற்சித்தனர். இதனால், அரச மாளிகை அல்லோல கல்லோலப்பட்டது. மன்னனின் உறவினர்களும் அவனது அனுசரணையைப் பெற்ற நிலமேக்களும் பிலிமத்தலாவையை கடுமையாக எதிர்த்தனர். அதற்காக ஆங்கிலேயருடன் நட்புறவு பூண்டனர். கி.பி. 1798 ஜூலை மாதம் 26 ஆம் திகதி இராஜாதிராஜசிங்க மன்னன் காலமானான். பிலிமத்தலாவ தனது தலைமைப் பிரதானி என்ற அந்தஸ்தை இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்த எண்ணினான். பகைவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் நாட்டு மக்களிடையே நற்பெயரைச் சம்பாதி... எதிர்காலத்தில் கண்டி இராச்சியத்தின் மன்னனாக வருவதற்கும் திட்டம் தீட்டினான். அதனால், காலஞ்சென்ற இராஜாதிராஜசிங்க மன்னனின் தூரத்து உறவினன் ஒருவனை மன்னனாக்க முயற்சித்தான். அதற்குப் பொருத்தமான ஒருவனை தெரிவுசெய்தான். அவன் இராஜசிங்க மன்னனின் பட்டத்து ராணிகளில் ஒருத்தியின் ... தான் கண்ணுச்சாமி (சில இடங்களில் இந்த இளவரசனின் தாய் இராஜாதி ராஜசிங்கன் மன்னனின் பட்டத்து ராணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது).

இளவரசன் கண்ணுச்சாமி ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் என்ற பெயரில் அரசனானான். புதிய மன்னனுடன் நட்புறவு பூண்ட பிலிமத்தலாவை தனக்கெதிராகச் செயற்படுபவர்களை பழிவாங்கினான். அத்துடன், அரச மாளிகையில் பொறுப்புகளை வகித்த நாயக்கர்களை நாட்டில் இருந்து வெளியேற்றினான். உள்நாட்டு எதிரிகளைக் கொன்று குவித்தான். இத்தகைய நிலைமையால் நிலமேக்கள் குழுக்களாகச் சேர்ந்து அரசாட்சியைக் கைப்பற்றத் தருணம் பார்த்திருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதுளி பெருவெள்ளம்

ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் தன் அப்பாவுடன் வாழ்ந்து வந்தான். அவன் பரீட்சையில் சித்தி பெற்றமையால், சைக்கிள் வேண்டுமென்று அடம்பிடித்தான். ஆனால், அவனது அப்பா ஒரு உண்டியலை மட்டுமே வாங்கிக் கொடுத்தார். ''அப்பா நான் சைக்கிள் கேட்டதற்கு உண்டியலை ஏன் தருகிறீர்கள்?'' என்று சிறுவன் கேட்டான். அவர் ஒன்றும் கூறவில்லை. மகனை அழைத்த அவர் ''சமையலறைக் குழாயில் நீர் கசிகிறது. கீழே ஒரு பாத்திரத்தை வை. வீணாகப்போகும் நீர் எமக்குப் பயன்படும்'' என்றார். 'சொட்டுச் சொட்டாகக் கசியும் நீர் வீணானால் என்ன இழப்பு வந்துவிடப்போகிறது' என்று சிணுங்கியபடி பாத்திரத்தை வைத்தான் சிறுவன்.

காலையில் ''மகனே! நேற்று குழாய்க்குக் கீழே வைத்த பாத்திரத்தைக் கொண்டு வா!'' என்றார் தந்தை. மகன் அறைக்குள் சென்று பார்த்தபோது, பாத்திரம் நிரம்பியிருப்பதைக் கண்டான். அப்போது அவனுடைய தந்தை ''பார்த்தாயா சிறுகச் சிறுக சேமித்தால் என்றும் நீ பலனை அடையலாம்'' என்றார். அத்துடன் ''நான் உனக்குக் கொடுத்திருக்கும் உண்டியலிலும் சிறிது சிறிதாகப் பணம் சேர்த்து வைத்தால் சைக்கிளை வாங்கலாம்'' என்றார். சிறுவனும் மகிழ்ச்சியுடன் உண்டியலில் பணம் சேர்க்கத் தொடங்கினான்.

எம்.எம்.முஹம்மத்,
அஸ்ஹர் கல்லூரி., அக்குறணை.



# கண்கள் இமைப்பது ஏன்?

எமது கண் இமைகள் மேலும் கீழும் அசைந்து ஒரு துடைப்பானைப் போன்று பணிபுரிகின்றன. மெல்லிய தோலால் ஆக்கப்பட்ட கண் இமைகள் பார்வையைத் தடுக்காதபடி வேகமாக அசைந்து தாமாகவே தமது பணியைச் செய்கின்றன. ஆறு வினாடிகளுக்கு ஒரு முறை நாம் இமைகளை இமைக்கிறோம். அதாவது, மனிதன் தன் வாழ்நாளில் இரண்டரைக் கோடி முறை இமைக்கிறான்.

எமது இமைகளில் உள்ள முடிகள் விரிவாகவே அமைந்து காணப்படுகின்றன. அதன் பணி, தூசுகள் கண்ணில் விழாமல் பாதுகாப்பதே ஆகும். மழை பெய்யும் போதோ, காற்று மணலைச் சுற்றி வீசும்போதோ இமைகள் தாமாகவே மூடிக்கொள்கின்றன.

மழைநீர், வியர்வை ஆகியவை கண்களில் விழாமல் ஒரு பக்கமாக வடியும்படி புருவங்கள் தடுப்பாக இருக்கின்றன. மேலும், இமைப்பதால் கண்கள் ஈரத்துடன் இருக்கவும், எளிதில் சுழலவும் முடிகிறது. கண் இமையோரங்களில் 20,30 சிறு சுரப்பிகள் உள்ளன. இமைகளுக்கு இடையே இவற்றின் சுரப்பி அமைந்துள்ளது. கண் இமைகள் மூடும்போது, இச்சுரப்பிகள் நீரைச் சுரக்கின்றன. இந்த நீர், கண்களுக்கு நன்மை பயக்கின்றது.



எச்.எம்.அஸ்லம்,
ஓட்டமாவடி தே.பாட.,
ஓட்டமாவடி.




## அறிந்ததில் சில...

- ஐரோப்பிய ஒன்றியத்தில் இறுதியாக இணைந்தது - ருமேனியா, பல்கேரியா
- உதைபந்தாட்டம் ஒலிம்பிக்கில் எப்போது சேர்க்கப்பட்டது -1900 ஆம் ஆண்டு
- 2 பிரதமர்கள் இணைந்து ஆட்சி செய்யும் நாடு - சான் மரீனோ
- இலங்கை கிரிக்கெட் அணி எப்போது தனது முதலாவது கிரிக்கெட் தொடரை வெற்றி கொண்டது - 1985 இல்
- 'டுஸ்ரா' எனும் பந்துவீச்சு முறையை அறிமுகப்படுத்தியவர் - முத்தையா முரளிதரன்
- தனக்கென தாய்மொழி இல்லாத நாடு - சுவிற்சர்லாந்து

எஃப்.ஆர்.எம்.பஹ்ரி,
மருதமுனை.

# மார்க்கோணி

கம்பியில்லாத் தந்தி முறையையும், பேச்சை வடிவமாக்கும் முறையையும் இணைத்து மார்க்கோணி 1874 -1937 காலப்பகுதிகளில் வானொலியைக் கண்டுபிடித்தார். இதனால் வானொலியின் தந்தை எனவும் போற்றப்பட்டார். 1709 இல் இயற்பியலுக்கான நொபெல் பரிசை Kart fordinand Braun என்பவருடன் இணைந்து பெற்றார். இத்தாலிய நாட்டில் பொலொனா நகரில் பிறந்த இவர், தமது பதினாறாவது வயதில் அதாவது 1890 இல் கம்பியில்லாத் தொலைத் தொடர்பு முறையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். தொடர் ஆய்வுகளால் தமது 21 ஆவது வயதில் முதல்முதலாக ஓரிரு மைல் தூரத்தில் திசைதிருப்பும் மின்கம்பம் (Directional Antenna) மூலம் தொடர்புகளை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றார்.

1937 இல் இவர் காலமானபோது, உலக வானொலி நிலையங்கள் அனைத்தும் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலியைச் செலுத்தின.

தி.டர்மிலா,
புனித திரேசா பெ.கல்., கிளிநொச்சி.



## கண்டியை ஆட்சி செய்த மன்னர்களும் ஆட்சி வருடங்களும்

| மன்னர்கள் | வருடங்கள் |
|---|---|
| சேனா சம்பத விக்ரமபாகு | கி.பி. 1469 - 1511 வரை |
| ஜயவீர | கி.பி. 1511 - 1552 வரை |
| கரலியத்த பண்டார | கி.பி. 1552 - 1582 வரை |
| முதலாம் ராஜசிங்கன் | கி.பி. 1582 - 1591 வரை |
| டொன் பிலிப். (யமசிங்க பண்டார) | 6 மாதம் |
| முதலாம் விமலதர்ம சூரியன் | கி.பி. 1591 - 1604 வரை |
| செனரத் | கி.பி. 1604 - 1635 வரை |
| இரண்டாம் ராஜசிங்கன் | கி.பி. 1635 - 1687 வரை |
| இரண்டாம் விமலதர்ம சூரியன் | கி.பி. 1687 - 1707 வரை |
| ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன் | கி.பி. 1707 - 1739 வரை |
| ஸ்ரீ விஜய ராஜசிங்கன் | கி.பி. 1739 - 1747 வரை |
| கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் | கி.பி. 1747 - 1782 வரை |
| இராஜாதி ராஜ சிங்கன் | கி.பி. 1782 - 1798 வரை |
| ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் | கி.பி. 1798 - 1815 வரை |

# வெளிச்சக் காலம்

வானக் கோழி கொக்கரிப்பாம்
வாடி தங்காய் கேட்போம்
வானம் எங்கும் வெளிச்சமாக
வாடி தங்காய் பார்ப்போம்!

வானக் கோழி முட்டையுண்டாம்
வானின் உச்சியில் பெரிதாய்
ஞானச் சுடரைப் பரப்பி வருதாம்
ஞாயிறு தானா பார்ப்போம்!

தங்க முட்டையும் பவனிவருதாம்
தங்காய் வாடி பார்ப்போம்
திங்கள் திங்கள் திங்களென்று
சேர்ந்து வருதாம் பார்ப்போம்!

பாத்திமா ஃபஸுஹா,
அக்குறணை பா.வித்., அக்குறணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடத்தலவின்ன கலதெனிய சஹ்றா பாலர் பாடசாலையின் ஒன்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சிறுவர் தினம், வருடாந்த விளையாட்டுப் போட்டி, வருடாந்த கலைவிழா மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழா என்பன அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண சபை உறுப்பினர் லாபிர் ஹாஜியார் மற்றும் விசேட அதிதிகளாக உடத்தலவின்ன பள்ளி பரிபாலனசபைத் தலைவர் எம்.நஸீர், ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி அதிபர் எம்.ஜீ.நிலாப்தீன், உப அதிபர் எஸ்.முனவ்பர், கிராம அதிகாரி எஸ்.ஏ.வாஹிட் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியின் சில நிகழ்வுகளை காணலாம்.




மேல் மாகாணத்தில் சமூகக் கல்விப் போட்டியில் முதலிடம் பெற்ற மே/மது வெலிப்பன்னை ரஹ்மானியா மகா வித்தியாலய மாணவி எஃப்.ருஷ்கா, இரண்டாம் இடத்தைப் பெற்ற எஃப்.நஜ்மால் ஆகியோருக்கு சான்றிதழ்களை அதிபர் தேசமானி அல்ஹாஜ் எம்.அஸார் வழங்குவதையும் அருகில் பகுதித் தலைவி எம்.எச்.எஃப்.றலீனா அவர்களையும் காணலாம்.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



யாழ்ப்பாணம் குருக்கள்வளவு அச்சுவேலியைச் சேர்ந்த கஜேந்திர சர்மா-வைணவி தம்பதியின் செல்வப் புதல்வன் ஸ்ரீமயன், 07.11.2012 இன்று தமது முதலாவது பிறந்தநாளை விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: ச.கேசவக் குருக்கள்)*



சாய்ந்தமருதைச் சேர்ந்த இப்றாஹீம்-முபீதா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா, 27.10.2012 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: எம்.ஐ.ஸபீபா)*



புதுக்குடியிருப்பு 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த டிவிற்குமார் - லதாராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் டிலைக்ஷிகன், 22.10.2012 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



வத்தேகெதர பொல்கொல்லையைச் சேர்ந்த தஸ்லிம் - நசிரா தம்பதியரின் செல்வ புதல்வன் உஸ்மான், 05.10.2012 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: எம்.டி.எஃப்.சுமையா)*



சுன்னாகத்தைச் சேர்ந்த குமார்-மேசி தம்பதியரின் செல்வப் புதல்வி கிளாறிசா, 08.10.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் வேளாங்கன்னி மாதாவின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



கா.சிவகாந்,
சித்திவிநாயகர் இந்துக் கல்.,மன்னார்.



என்.உஸ்மான் நளிர்,
ஸாஹிரா தே.பாட., மாத்தறை.



எம்.சப்வான்,
கொடகொட மு.ம.வித்., கொடகொட.



ஆர்.சேதுமாதவன்,
நோர்வூட் த.ம.வித்.,
நோர்வூட்.



எஃப்.அஸ்ரிபா,
அந்நூர் மத்திய கல்., பாணகமுவ.



எஃப்.சிபானா,
மடிகே அனுக்கன மு.ம.வித்.,
ஹெட்டிப்பொல.



ந.நந்தினி,
அகாபே அறநெறிப் பாட.,
பிட்டமாறுவை.

## பொலன்னறுவைக் கால கலைப்படைப்புக்கள்

### மகா பராக்கிரமபாகு சிலை

பராக்கிரம சமுத்திரக் கரையில் பொத்குல் விகாரைக்கு அருகில் 12 அடி உயரத்தில் மகா பராக்கிரமபாகு மன்னனின் சிலை தனிப்பாறையில் செதுக்கப்பட்டுள்ளது. தலையில் முடி போன்ற அணியுடனும் முகத்தில் தாடியுடனும் கையில் சுவடி போன்ற எழுத்துச் சுருள் ஒன்றைத் தாங்கியவாறு இச்சிலை கம்பீரமாகக் காணப்படுகின்றது.

உடலின் பாரத்தை இடது கால் தாங்குவது போல, வலது கால் சற்று வளைந்துள்ளது. சாந்தமான தோற்றத்துடன் காட்சி தரும் இச்சிலை குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எஸ்.எச்.பெரோஸ் அவர்கள் தமது ஆய்வில், இச்சிலை முதலாம் பராக்கிரமபாகு மன்னருடையது, என்று கூறுகின்றார். ஆனால், எச்.சீ.பி. பெல் அவர்களோ, இச்சிலை அரசர் ஒருவருடையதன்று; மாறாக, ஒருசமயத் தலைவருடையது என்கிறார். ஏனெனில், கையிலுள்ள சுவடி, கழுத்திலிருந்து பூணூல் போல இருக்கும் அமைப்பு, முகத்தில் காணப்படும் தாடி போன்ற அமைப்பு என்பன சமயத்தலைவருக்குரியது என்கிறார். ஆனந்த குமாரசாமி அவர்கள், இச்சிலை முனிவர் ஒருவருடையது என காரணம் காட்டி நிறுவியுள்ளார். சிரி குணவர்தன அவர்கள், இது ஒரு முனிவரின் சிலையென்றும் கையிலுள்ள ஏடு இதை உறுதிப்படுத்துவதாகவும் கூறுகிறார்.



செனரத் பரணவிதான அவர்கள், இது முதலாம் பராக்கிரமபாகுவின் சிலையென பல காரணங்களுடன் நிறுவியுள்ளார்.

ஓவியம் வரைவோம் - 127
ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

### கல்விகாரை

கல்விகாரைக்கு 'உத்தராமய' எனும் பெயரும் உண்டு. இங்கு நான்கு புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. இச்சிலைகள் வெவ்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன. கல்விகாரையின் அடித்தளத்தை நோக்கும்போது, இச்சிலைகளை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து, கற்பாறையில் சிற்பி அவற்றை நிர்மாணித்துள்ள முறையானது, அவர்களின் திறமையை எடுத்துக்காட்டுகின்றது. இந்த நான்கு சிலைகளும் பொலன்னறுவைக் கால சகல லட்சணங்களையும் உள்ளடக்கிக் காணப்படுபவையாக உள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாத எரிசக்தியினால் சுற்றுலாத்துறை உத்வேகம்




ஐ.நா.வின் உலக சுற்றுலா அமைப்பினால் உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச சுற்றுலா தினம் கொண்டாடப்படுகின்றது. சுற்றுலாத் துறையின் பலதரப்பட்ட துறைகளை முன்னேற்றி அந்நியச் செலாவணியினை ஈட்டுவதே இந்த நடவடிக்கையின் பிரதான குறிக்கோளாகும். இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் பலதரப்பட்ட தொனிப்பொருளை அடிப்படையாகக்கொண்டு சுற்றுலாத்துறையினைப் பலப்படுத்த இந்த அமைப்பினர் திடசங்கற்பம் கொண்டுள்ளனர்.


## வளமான அபிவிருத்திக்கு எரிசக்தியின் பயன்பாடு

வேகமான வளர்ச்சியினை எதிர்கொண்டுள்ள உலக மக்களின் தேவைகள் வரையறையற்றதாக உள்ளது. இந்தத் தேவைகள் பலவற்றை நிறைவேற்றுவதற்கு எரிசக்தி அவசியமானதாகும். உலகில் பல நாடுகள் எரிசக்தியினைப் பெறுவதற்காக மசகு எண்ணெய், இயற்கை வாயு, நிலக்கரி, படிம வாயு என்பனவற்றைப் பயன்படுத்துகின்றன. இவற்றின் வேகமான பயன்பாட்டின் காரணமாக, உலகில் இந்த வளங்கள் அருகி வருகின்றன. இந்த சக்தி வளங்கள் வேகமாகப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் அளவுக்கு மீள் உருவாக்கம் நிகழாமையே இதற்குக் காரணமாகும்.

முழு உலகமுமே இன்று எரிசக்தி வளங்கள் அருகி வரும் பிரச்சினையினை எதிர்கொண்டு வருகின்றன. இதற்குத் தீர்வாக மாற்று எரிசக்திகள் குறித்து பெரும்பாலான நாடுகள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளன. இவற்றுள் காற்று சக்தி, அலை சக்தி, சூரிய ஒளி, உயிர்வாயு ஆகிய இயற்கையான விடயங்கள் குறித்தும் அனைவரும் கவனத்தினை செலுத்தியுள்ளனர்.







இதனால், நாட்டின் ஸ்திரமான அபிவிருத்திக்கு மாற்று எரிசக்தி உற்பத்தியினை ஊக்குவிப்பது அவசியமாக உள்ளது. உலக சுற்றுலாத்தினத்தின் இந்த ஆண்டுக்கான தொனிப்பொருள் 'மாற்று எரிசக்தியினைப் பயன்படுத்தி சுற்றுலாத்துறையின் திடமான அபிவிருத்தியினை ஊக்கப்படுத்துதல்' என்பதாகும்.

## சுற்றுலாத்துறையும் எரிசக்தியும்

உலகில் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதில் மிகப் பாரியளவிலான எரிசக்தி நுகர்வு இடம்பெறுகின்றது. அது நாளுக்கு நாள் வேகமான வளர்ச்சியினை அடைகின்றது. உலகம் எதிர்கொள்கின்ற எரிசக்தி நெருக்கடியிலிருந்து சுற்றுலாத்துறையினை மீட்டெடுப்பதற்கு மாற்று எரிசக்தி பிறப்பாக்கிகள்மீது அக்கறை செலுத்துவது அவசியமாக உள்ளது. இந்த ஆண்டு முதல் சுற்றுலாத்துறையினை புதிய பாதையில் கொண்டு செல்ல உலகின் அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இலங்கையும் இந்த செயற்பாடுகளின் பங்காளியாக உள்ளது.

இயற்கை வளங்களைப் பயன்படுத்தி எரிசக்தியினை உருவாக்குதல் இதன் ஓர் இலக்காகும். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிசக்தி நெருக்கடிகள் தொடர்பாக, இளம் சமுதாயத்தினரை அறிவுறுத்துவதும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை இதற்காக பல நிகழ்ச்சித்திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருகின்றது.

## உலகின் மனம் கவர்ந்த இலங்கை

நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட இலங்கை நாடானது, அன்று முதல் இன்றுவரை சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கொள்ளை கொண்ட நாடாகத் திகழ்கின்றது. இலங்கை வெப்ப வலய நாடாக இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். எமது நாட்டில் உள்ள தேசிய கலாசாரம், விருந்தினர் உபசாரம், இயற்கை வளங்களின் அழகு என்பன சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் விடயங்களாக உள்ளன. விடுமுறைகளைக் கழிப்பதற்கு, வர்த்தக நோக்கங்களுக்கு, கருத்தரங்குகளுக்கு, உறவினர்களை- நண்பர்களை சந்திப்பதற்கு கல்வி நடவடிக்கைகளுக்கு மற்றும் மத ரீதியிலான வழிபாடுகளுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றனர்.

## சுற்றுலாத்துறையின் நலன்கள்

சுற்றுலாத்துறையினால் நாட்டிற்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. அந்நிய செலாவணி உழைப்பு, நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாக்கம், பிரதேச ரீதியிலான அபிவிருத்தி, அரச வருமானம் அதிகரிப்பு, பொருளாதார முன்னேற்றம் என்பன இவற்றுள் பிரதானமானது. சுற்றுலாத் துறையின் பிரதான குறிக்கோளாக, சுற்றாடலைப் பாதுகாக்கும் போக்கு அதிகரிப்பு, அதற்காக வெளிநாட்டு உதவிகள் கிடைத்தல், அழியும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ள விலங்குகளைப் பாதுகாத்தல், அதற்காக வெளிநாட்டு உதவிகள் கிடைத்தல் மற்றும் சரணாலயங்கள், இயற்கைப் பூங்காக்கள், விலங்குகள் பூங்காக்கள் என்பனவற்றின் நுழைவுச் சீட்டுக்களை விற்பதனூடாகக் கிடைக்கும் வருமானத்தில் இவ்வாறான இடங்களைப் பராமரித்தல் என்பன சூழலுக்கு அமைவான செயற்பாடுகளில் சிலவாகும்.

கலாசார முக்கோணப் பகுதிகள் மற்றும் பிற பகுதிகளில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க அருங்காட்சிப்பொருட்களை பார்வையிடவென நுழைவுக் கட்டண வருமானத்தினைப் பெறல், கைவினைப்பொருட்கள் உற்பத்தியில் மலர்ச்சி, கலாசார மற்றும் கலைப்பொருட்கள், கலைஞர்களுக்கு வருமானம் கிடைத்தல், இலங்கை கலைநுட்பங்களுக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் கிடைத்தல் என்பன கலாசார ரீதியில் கிடைக்கும் நன்மைகளில் சிலவாகும்.

ஏனைய இனங்களை இனங்காணுதல், உலக சமாதானத்திற்கு வழிகோலுதல், பலதரப்பட்ட கலாசாரங்கள் நல்ல பழக்கவழக்கங்கள் என்பனவற்றை அறிந்துகொள்ளவும், இலங்கைக் கலாசாரத்தினை உலகுக்கு அறிமுகப்படுத்தவும், இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொள்ளவும் இதனூடாக வாய்ப்புக் கிட்டுகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் கமலுக்கும் தம்பிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**කමල්: මල්ලි, අපි අද මොනවද කරන්නේ?**
மல்லி, அப்பி அத மொனவத கறன்னே?
கமல்: **தம்பி, இன்று நாம் என்ன செய்வோம்?**

**මල්ලි: අයියේ, අපි සරුංගල් යවමු.**
அய்யே, அப்பி சருங்கல் யவமு.
தம்பி: **அண்ணா, நாங்கள் பட்டம் விடுவோம்.**

**කමල්: සරුංගලයක් තියෙනවා ද මල්ලි?**
சருங்கலயக் தியெனவாத மல்லி?
கமல்: **பட்டமொன்று இருக்கிறதா தம்பி?**

**මල්ලි: නැහැ අයියේ, අපි එකක් හදමු.**
நெஹெ அய்யே, அப்பி எகக் ஹதமு.
தம்பி: **இல்லை அண்ணா, நாங்கள் ஒன்று செய்வோம்.**

**කමල්: සරුංගල් හදන්න උණපතුරු ඕනේ. සව්කොල ඕනේ.**
சருங்கல் ஹதன்ன உணபத்துரு ஓனே. சவ்கொல ஓனே.
கமல்: **பட்டம் செய்வதற்கு மூங்கில் வேண்டும். டிஷு கடதாசி வேண்டும்.**

**මල්ලි: මඩුවේ උණපතුරු තියෙනවා. නූලුත් තියෙනවා.**
மடுவே உணபத்துரு தியெனவா. நூலுத் தியெனவா.
தம்பி: **மடுவத்தில் மூங்கில் இருக்கிறது. நூலும் இருக்கிறது.**

**කමල් සව්කොළ?**
சவ்கொல?
கமல்: **டிஷு கடதாசி?**

**මල්ලි: අපි අම්මාගෙන් සල්ලි ඉල්ලගෙන සව්කොළ ගමු.**
அப்பி அம்மாகென் சல்லி இல்லகென சவ்கொல கமு.
தம்பி: **நாங்கள் அம்மாவிடம் பணம் வாங்கி டிஷு கடதாசி வாங்குவோம்.**

**අපි අක්කාට කියලා පාප්ප හදවා ගනිමු.**
அப்பி அக்காட்ட கியலா பாப்ப ஹதவா கனிமு.
**நாங்கள் அக்காவிடம் சொல்லிப் பசை செய்துகொள்வோம்.**

**කමල්: ආ.. ඒක හොඳයි.**
ஆ... ஏக ஹொந்தய்.
கமல்: **ஆ... அது நல்லது.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. நாங்கள் பட்டம் விடுவோம்.
..............................................................
ii. மடுவத்தில் மூங்கில் இருக்கின்றது.
..............................................................
iii. அக்காவிடம் சொல்லிப் பசை செய்துகொள்வோம்.
..............................................................






**Have** அல்லது **Has** எனும் துணை வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு நிலை வாக்கியங்களை, 'வினா' நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றி மேலும் இங்கே பயில்வோம்.

(அ) உன்னிடம் ஒரு குடை உண்டு.
You have an umbrella.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) உன்னிடம் ஒரு குடை உண்டா?
Have you got an umbrella?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* Do you have an umbrella?
உன்னிடம் ஒரு குடை உண்டா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(இ) அவர்களிடம் ஒரு வாகனம் உண்டு.
They have a vehicle.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஈ) அவர்களிடம் ஒரு வாகனம் உண்டா?
Have they got a vehicle?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* Do they have a vehicle?
அவர்களிடம் ஒரு வாகனம் உண்டா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* 'Has' எனும் துணை வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு வாக்கியங்களையும் அவற்றின் வினா வாக்கியங்களையும் இங்கே அவதானிப்போம்.

(உ) அவனிடம் ஒரு காசுப்பை உண்டு.
He has a purse.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) அவனிடம் ஒரு காசுப்பை உண்டா?
Has he got a purse?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

* இந்த வினா வாக்கியத்தையும் வேறோர் இலக்கண ரீதியாகப் பின்வருமாறு அமைக்கலாம்.

(எ) Does he have a purse?
அவனிடம் ஒரு காசுப்பை உண்டா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஏ) அவளிடம் ஒரு கைப்பை உண்டு.
She has a hand-bag.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஐ) அவளிடம் ஒரு கைப்பை உண்டா?
Has she got a hand-bag?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஒ) Does she have a hand-bag?
அவளிடம் ஒரு கைப்பை உண்டா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)




சிங்கப்பூர் வரலாற்றில் 1959 இல் நடைபெற்ற முதலாவது தேர்தலில் Peoples Action pourty (PAP) பெரும்பான்மை பலத்துடன் வெற்றியீட்டவே, லீ குவான் யூ பிரதமரானார். அரசுத்தலைவராக இருந்த யூஸுப் பின் இஷாக் ஜனாதிபதியாக்கப்பட்டார். பூரண சுதந்திரம் பெற்ற சிங்கப்பூர் 1962 இல் நடைபெற்ற மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் பின்னர், 1963 இல் மலேசியாவின் சமஷ்டி ஆட்சியுடன் இணைந்தது. பின்னர் ஏற்பட்ட உட்பூசல்கள் காரணமாக, 1965 ஓகஸ்ட் 9 ஆம் திகதி மலேசியாவிலிருந்து வெளியேற்றப்பட்டது.

தற்போதைய சிங்கப்பூர் ஒற்றை சட்டசபையைக்கொண்ட நாடாளுமன்றக் குடியரசாகத் திகழ்கின்றது. பிரித்தானிய சட்டமூலங்களைப் பின்பற்றும் நாடாகக் கருதப்படும் சிங்கப்பூரின் எதிர்க்கட்சியாக, சிங்கப்பூர் தொழிலாளர் கட்சி உள்ளது. 1959 முதல் 1990 வரையில் பிரதமராக இருந்த லீ குவான் யூ தனது ஆட்சியின்போது, வேலையில்லாப் பிரச்சினை, வதிவிடப்பிரச்சினை, இயற்கை அனர்த்தங்கள் ஆகியவற்றுக்கு முகம்கொடுத்து அவற்றிலிருந்து சிங்கப்பூரை மீளச்செய்து வளம் மிக்க நாடாக்கினார். 1990 இல் லீ குவான் யூ ராஜினாமாச் செய்யவே, அடுத்ததாக கோ சோக் துங் பதவியேற்றார்.

1993 இல் பதவியேற்ற தொங் சியோங் என்பவரே மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாவார். அவருக்குப் பின்னர், 1999 இல் பதவிக்கு வந்த எஸ்.ஆர்.நாதன் இரண்டாவது முறையும் ஜனாதிபதியாகி, இவரது பதவிக்காலம் முடிவுற்றதும் புதிய ஜனாதிபதியாக டோனி டான் கெங் யாம் என்பவர் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி பதவியேற்றார். இவர், 35.20% வாக்குகள் பெற்று பதவிக்கு வந்தார்.


டோனி டான் கெங் யாம்






சிங்கப்பூர் பல்லின மக்கள்கொண்ட நாடாகும். சீன, மலேசியா, இந்தியா, இந்தேனேஷியா, ஐரோப்பிய நாடுகளின் கலாசாரங்கள் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமே காணப்படுகின்றன. இங்கு வாழும் மக்களில் சீனர் 76.8%, மலேயர் 13.9%, இந்தியர் 7.9% காணப்படுகின்றனர்.

இதில் பௌத்தர்கள் 42.5%, முஸ்லிம்கள் 14.9%, கத்தோலிக்கர் 5%, கிறிஸ்தவர் 10%, தாவோயிஸம் 8.5%, இந்துக்கள் 4% மாகும். மதங்களைப் பின்பற்றாதோர் 14.8% என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சிங்கப்பூரின் சனத்தொகை 2010 ஆம் வருடக் கணக்கெடுப்பின்படி 5 மில்லியன்களைத் தாண்டியுள்ளது.

சிங்கப்பூரின் தேசிய மலராக ஓர்கிட்டும், தேசிய மிருகமாக சிங்கமும், தேசிய பறவையாக கிரிம்ஸன் ஸன்பேர்ட்டும் (Crimson Sunbird) காணப்படுகின்றன. சிங்கப்பூரில் செப்பனிடப்பட்ட பெருந்தெருக்கள் 3,066 கிலோ மீற்றர்களாகும். இதில் அதிவேகப்பாதை 150 கிலோ மீற்றர்களாகும். இங்குள்ள புகையிரதப் பாதையின் நீளம் 39 கிலோ மீற்றர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

# கண்டி மஹரத்மல ஊடக போட்டி பரிசளிப்பு விழா



கண்டி பிளேன் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டிலும், மத்திய மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரத்தின் கீழும் நடைபெற்ற மஹரத்மல ஊடக பாடநெறி தொடர்பான பரிசுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் கண்டியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டிகளுக்கான தமிழ்மொழியிலான ஊடக அனுசரணையை 'விஜய்' பத்திரிகை வழங்கியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.11.14 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 390
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## 2 படங்களைக் குறித்து நிற்கும் சொற்களை எழுத்துக்களிடையே இனங்கண்டு நிறந்தீட்டுக

blue, bird, rain, panda, glove, shark



| | | | | | |
|---|---|---|---|---|---|
| g | p | a | n | d | a |
| s | q | e | q | r | g |
| h | b | u | e | a | l |
| a | i | l | k | i | o |
| r | r | b | r | n | v |
| k | d | v | w | m | e |


## 3 சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக





## ஒத்த கருத்துடைய சொல்லின்கீழ்க் கீறிடுக 5

1. வைத்தியம் (பல் வைத்தியம்/மருத்துவம்/தொழில்)
2. சிங்கம் (கேசம்/பரி/அரி)
3. பெண் (பொம்மை/மனையாள்/கோதை)
4. யாக்கை (உடல்/யாகம்/வாய்மை)
5. கோபம் (கொடூரம்/சினம்/துயில்)


## பொருத்தமற்ற உருவில் X அடையாளமிடுக 4



## நிறம் தீட்டப்பட்டுள்ள உருக்களின் நிழற்பிரதியுடன் இணைக்க 1



## குறுக்கெழுத்துப் போட்டி இல.06




### மேலிருந்து கீழ்

01. நிலத்தின்கீழ் விளையும் பயிர்.
02. அதிகமாக இந்த அடுப்பில்தான் சமைக்கின்றனர்.
03. உறங்குவதற்குத் தேவையானது.
05. இது வேகமாக ஓடும்.
08. அரசர் நாட்டைக் காக்க வைத்திருப்பது.
10. பாடசாலையை விட்டு நீங்கும்போது, இப்பத்திரத்தைப் பெறவேண்டும். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. மூதாட்டி.
03. நட்புக்கு எதிர்ப்பதம்.
04. இந்த வழியில் சம்பாதிப்பது தவறானது.
06. சிங்கம் இதில் வசிக்கும்.
07. சிறையில் இருப்பவன்.
08. விலை உயர்ந்த புடைவை. (மாறியுள்ளது)
09. உலகம்.
11. காகத்திடம் இருந்து நரி தட்டிப்பறித்த பண்டம். (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல.05 விடைகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | 2 க | ட | 3 க | 4 வி | |
| 5 டை | ப | | 6 வி | ளை | 7 வு |
| | ட | | தை | | த |
| 8 பா | ம் | 9 பு | | 10 ல் | க |
| ட | | ற் | | க | |
| 11 கி | ண | று | | 12 ப | ரி |

## அறிவுக்கு விருந்து - 387 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**



**போட்டி: 04**

வாகை, வாள், வா, வாழ், கள், பா, பாழ், பாதுகை, பாகை, பாப்பா, பாவா, துகள், கை, கைது, தாது, தாழ், தாழ்ப்பாள், தாள், தா

**போட்டி: 05**

1. 18, 22, 26, 30, 34
2. 102, 96, 90, 84, 78
3. VI, VII, IX, XII, XVI, XXI
4. 8, 16, 24, 32, 40
5. II, IV, VI, VIII, X

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 387 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.அக்தாஸ், சிறிகுளம்வத்த, மல்லவபிட்டிய.

**போட்டி: 02**
ஜே.அமிலேஷ், சர்வோதய வீதி, சின்ன ஊறணி.

**போட்டி: 03**
பி. அபிராமி, சேர்வூட் கொலனி, ஹப்புத்தளை.

**போட்டி: 04**
எம்.ரயீத், கேணிக்காடு, மூதூர்-01.

**போட்டி: 05**
இ.கோபிகிருஷ்ணன், அன்புவழிபுரம், திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எல்.அஹமட், மாபாகந்த.
- எம்.சுஹைல், புத்தளம்.
- வி.கோமதி, கிளிநொச்சி.
- எஃப்.ஹப்ஸா, தலல்ல.
- என்.ரவிபிரசாத், எட்டியாந்தோட்டை.
- எஃப்.நசீபா, கெகுனுகொல்ல.
- எம்.அக்மர், வரகாப்பொளை.
- மு.வினோத், மஸ்கெலியா.
- எஸ்.ரஹீமா, பதுளை.
- பி.திலுக்ஷா, கொழும்பு-06.

## சிறந்த கட்டடக் கலைஞர்



கறையான்களுக்குப் பார்வை கிடையாது. மேலும் இவை உடலளவில் வெறும் 12 மி.மீற்றர் நீளமே இருந்தாலும் மற்றைய எல்லாப் பூச்சிகளையும்விட வசிப்பிடம் அமைப்பதில் மிகச் சிறந்த கட்டடக் கலைஞர்களாக விளங்குகின்றன.

அதிலும் ஆபிரிக்காவில் உள்ள கறையான்கள், மண் மற்றும் கழிவுப்பொருட்கள் சேர்ந்த கலவையைக்கொண்டு 12 மீற்றர் உயரத்துக்குத் தமது வசிப்பிடத்தை அமைக்கின்றன.

உயரமான புற்றுகளை அமைப்பது போன்றே, மிக அழகான புற்றுகளை அமைப்பதிலும் கறையான்கள் மிகவும் பெயர் பெற்றவை. அவை ஈரமான சுற்றுப்புறங்களில் மட்டும்தான் வாழ முடியும் என்பதால், தமது வசிப்பிட புற்றுகளை தரையின் அடியில் 40 மீற்றர் ஆழமுள்ளதாகவும் நீரோட்டம் உள்ள இடத்திலும் அமைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
சாரணர் உலகம்

# எனது கௌரவத்தின்மீது சத்தியம் செய்கிறேன்






சாரணன், சாரண இயக்கம் என்றால் என்னவென்று இதுவரையில் நீங்கள் கொண்டிருந்த கருத்து என்ன? தமிழகராதியில், சாரணன் என்ற சொல்லிற்கு ஒற்றன், தூதுவன், தொண்டன் என்று பல பொருள்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சுருக்கமாகக் கூறுவதாயின், உலகத்தில் உள்ள அரசியல் சம்பந்தப்படாத முழுக்க முழுக்க சேவைக்காகவே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட மிகச் சில அமைப்புகளில் சாரண இயக்கமும் ஒன்று. இதன் சிறப்பம்சம் என்னவென்றால், ஒரு மாணவனுக்கு சாரணியமானது, மிகவும் சிறிய வயதில் இருந்தே பயிற்சிகளை வழங்க ஆரம்பிக்கின்றது. ஒரு மாணவன் தன்னுடைய எட்டாவது வயதிலேயே, குருளைச் சாரணனாக தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சாரணனாகவே வாழக்கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

எமது வாழ்க்கையானது, விதிப்படிதான் நடக்கிறது என்பார்கள். அது ஒரு சாரணனுடைய வாழ்க்கையில் உண்மையாகவே உள்ளது. மிகவும் கட்டுக்கோப்பான விதிகள் ஒவ்வொன்றும் அவனைச் சிறப்பாக்கும் நோக்கத்துடன் வரையறுக்கப்பட்டுள்ளன. அவனுக்கென்று உருவாக்கப்பட்டுள்ள சத்தியப்பிரமாணமானது அவன் தன்னுடைய கௌரவத்தின்மீது சத்தியம் செய்கின்றான் என்பதாகும். இவையெல்லாம் பெரிய பாறையை உடைத்து அதனைச் செதுக்கி அழகுபடுத்தி அழகிய கோவில் சிலையாக மாற்றும் முயற்சியாகும்.

(மிகுதி அடுத்த வாரம்)

## உலக சாரணர் இயக்கத்தின் குறிக்கோள் வாக்குறுதி




01. நாம் எதைச் செய்வதற்கு முயற்சிக்கின்றோம் என்பது.
02. இளைஞர் சமுதாயத்தின் மீதான ஒரே அழுத்த சக்தி நாம் அல்ல.
03. வெறுமனே புத்தக அறிவு மட்டுமல்ல; வாழ்நாள் முழுவதற்குமான செயன்முறை.
04. ஆண், பெண் இரு சாராருக்கும் உடையது.
05. நாம் எதனை நம்புகின்றோம் எதனை எதிர்பார்க்கின்றோம் என்பது.
06. சாரணத்தின் அடிப்படை கொண்டுள்ள மதிப்பினை வெளிப்படுத்தல்.
07. பிறருடன் ஒன்றித்து செயற்படுதல்.
08. மிகச் சிறந்த மக்கள், மிகச் சிறந்த உலகம்.
09. சுயபரிமாணம், ஒருவரது திறமையில் பூரணத்துவத்தை ஏற்படுத்திக்கொள்ளல்.
10. சமூகபரிமாணம் - செயலாற்றுகை ஈடுபாடு நட்புறவு.
11. உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேசத்தை உள்ளடக்கிய நடவடிக்கைகள்



## தொலை தூர வெளிச்சம்

பூலோகம் மெல்ல மெல்ல
பூவில்லாத உலோகமயமாகின்றது.
தென்றலாய் வீசிய காற்றும்
கந்தகம் கலந்து தீயாய் சுடுகின்றது.
இமயம் மட்டும் கடல் தாண்டி
வளர்கின்றது. எனினும்,
மானுடம் மட்டும் மெல்லத்
தேய்கின்றது!

முழு உலகமும் சுழலும்
அன்பு என்ற அச்சாணியோ
உருக்குலைகின்றது....
மனிதாபிமானம் மனதளவில் மரித்து
இன மத பேதங்கள் சுற்றாலைக்
காடாகிவிட்டன!

மற்றவன் உயிர் எடுக்கும் முன்
உற்றுக் கேள்!
உனது இதயம்கூட தடம் மாறித்
துடிக்கும்
முதுகுகளைச் சுத்தப்படுத்துவோம்
முழு உலகமும் சுத்தமாகும்....
போர்க்கலன்களும் புக்கலயங்கள் தாங்கி
தொலைதூர வெளிச்சம்
தொலையாமல் இருக்கட்டும்!

சுந்தரசிகாமணி மதுரன்,
சாரணத் தலைவர்,
இந்துக் கல்லூரி, கொழும்பு-04.

## இது எங்களுடைய சாரண கௌரவ கோசம் (Scout Yale)





ஹொந்தய்.... ஹொந்தய்.... போஹொம ஹொந்தய்...(Singhala)

நன்று.... நன்று..... மிகவும் நன்று..... (Tamil)

Goodooo..... Goodooo..... Very Good..... (English)

அச்சா..... அச்சா..... போஹொத் அச்சா.... (Hindi)

ஹரஷோ.....ஹரஷோ..... ஒசின்.... ஹரஷோ..... (Russia)

தோதே..... மோ யொய்..... (Japan)

## சாரணப் பெண்கள்



## சாரண சட்டங்களின் விளக்கம்



சாரண விதிகள் பத்தினை ஏற்கனவே நாம் தந்துள்ளோம். குறித்த விதிகளுக்கான விளக்கங்கள் வாரம் இரண்டு வீதம் தொடர்ச்சியாக இங்கு வழங்கப்படுகின்றன.

**சாரண சட்டம் - 1**

சாரணன் நம்பத்தகுந்தவன் சாரணனால் ஆற்றப்படும் அனைத்துவிதமான கடமைகளிலும் அவன்மீது நம்பிக்கை கொள்ள முடியும். அவன் உண்மை பேசுபவனாகவும் அநீதியைத் தூரப்படுத்துபவனாகவும் இருக்கின்றான்.

**சாரண சட்டம் – 2**

சாரணன், தான் சார்ந்துள்ள மதத்தின் மீது பற்றுறுதியுடையவன். மேலும் அவன் தனது தேசத்தின் மீதும், அரசியல் சாசனத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மீதும், அவனது பெற்றோர்கள் ஆசிரியர்கள், தொழில் வழங்குபவர்கள், நண்பர்கள் தான் கற்ற பாடசாலை, சாரணர் குழுவுக்கும் தான் சார்ந்துள்ள குழுத்தலைவன் உட்பட, சாரணர் தலைவர்களுக்கும் தனக்குக் கீழுள்ளவர்களின் மீதும் பற்றுள்ளவனாக இருப்பான்.

(மிகுதி அடுத்தவாரம்)



தயாரிப்பு: சாரணர் ஜெராம் ப. சில்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பல்வேறு துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்

# தாவரங்களும் உயிரினங்களும்


நைல் பர்ச்சி

உலக மயமாக்களின் காரணமாக வர்த்தகம், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறைகளில் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளன. அதன் பெறுபேறாக, உயிர் பல்வகைமையின் புகலிடங்கள் அழிவுற்று அல்லது குறைந்து செல்கின்றன. அத்தோடு, அவை பெருமளவில் கூடி வாழ்ந்த பிரதேசங்களை கைவிட்டு வேறு இடங்களை நோக்கியும் நகர்கின்றன.


இந்திய கீரி


அமெரிக்க மின்க்

சில பிரதேசங்களில் மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த தாவரங்களும், உயிரினங்களும் தற்பொழுது பல்வேறு பிரதேசங்களுக்கும் அறிமுகமாவதற்கு பொருளாதார தேவையே அடிப்படையாகும். விவசாய நடவடிக்கைகள், காடழிப்பு மீன்பிடிக் கைத்தொழில், அலங்காரச் செடிகள் வளர்ப்பு என்பன தாவரங்கள் மற்றும் பல்வேறு உயிரினங்கள் மீதும் பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. இவை சூழல் மீதும் பொருளாதாரத்தின் மீதும் பெரும் செல்வாக்குச் செலுத்துவதுடன், ஒவ்வொரு பிரதேசங்களிலும் உயிரின பல்வகைமையில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.


மைகோனியா



பல்வேறு பொருளாதார காரணங்களுக்காக, பல்வேறு தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது, சூழல் கட்டமைப்பிற்குள் பல்வேறு நோய்கள் பரவுவதற்கும் காரணமாக அமைந்துவிடுகின்றன. இதனால், தாவரங்களும் உயிரின வகைகளும் அழிந்துபோகும் பேரபாயத்தையும் எதிர்நோக்கி உள்ளன. இங்கு தகவல் சேவையில் அத்தகைய பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் தாவரங்கள், உயிரினங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்துகிறோம்.

(அ)

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, நொவெம்பர் மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 07, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org